# மகிழ்ச்சி

குழந்தைகளின் குதூகலம்

5



Maria

விடை தொகுப்பு

Maria

மரியா பப்ளிஷர்ஸ் (பி) லிட்.

முதல் பதிப்பு 2020

பதிவு அலுவலகம்
138, ஹைவேய்ஸ் காலனி, சுப்ரமணியபுரம், திருச்சிராப்பள்ளி – 620 020.

தலைமை அலுவலகம்
30 & 31, நட்சத்திரா, ஐ.ஏ.எஃப். சாலை, கிழக்கு தாம்பரம், சென்னை – 600 059.
தொலைபேசி : 044 – 22392332

மின்னஞ்சல்
info@mariapublishers.com

இணையதளம்
www.mariapublishers.com

வெளியிட்டோர்
மரியா பப்ளிஷர்ஸ் (பி) லிட்.,
13, சுந்தர்ராஜ் நகர், சுப்ரமணியபுரம்,
திருச்சிராப்பள்ளி – 620 020.
தொலைபேசி : 0431 – 2331245

அட்டை வடிவமைப்பு
முத்துக்குமார்

புத்தக வடிவமைப்பு
ஜென்சி

அச்சிட்டோர்
தி சபையர் ஆஃப்செட் பிரிண்டர்ஸ்

## 1. யாமறிந்த மொழிகளிலே

### பக்கம் 10

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. அறியாத 2. இனிமையில்லாத 3. புகழ்ச்சி
4. தவறு 5. வேண்டாம்

**ஆ) சிறுவினாக்கள்:**

1. உலகில் இனிமையான மொழி யாது?

   உலகில் உள்ள மொழிகளில் இனிமையான மொழி தமிழ் மொழி ஆகும்.

2. தமிழ் மொழி எத்தகையது?

   தமிழ் மொழி தேன் போன்று இனிமையானது.

3. பாரதியாரின் புனைப்பெயர்கள் மற்றும் சிறப்புப் பெயர்களை எழுதுக.

   காளிதாசன், சக்திதாசன், ஷெல்லிதாசன் என்பன பாரதியாரின் புனைப்பெயர்கள். தேசியக்கவி, விடுதலைக்கவி, அமரக்கவி, முன்னறி புலவன், மகாகவி, உலகக்கவி, தமிழ்க்கவி முதலியன பாரதியாரின் சிறப்புப் பெயர்கள் ஆகும்.

**இ) பெருவினாக்கள்:**

1. மகாகவி பாரதியார் – குறிப்பு வரைக.

   மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியார் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் 1882 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் நாள் பிறந்தார். இவரின் பெற்றோர் சின்னசாமி ஐயர், இலட்சுமி அம்மாள். பாரதியாரின் இயற்பெயர் சுப்பிரமணியன். இவர் தனது 11 ஆம் வயதிலேயே கவிபாடத் தொடங்கினார். பாரதியார் தமிழின் மீது அளவற்ற பற்றும், புலமையும் கொண்டவர். இவர் கவிஞர், எழுத்தாளர், சீர்திருத்தவாதி, விடுதலை போராட்ட வீரர் என பல பரிமாணங்களை கொண்டவர். இவர் தமிழ் மட்டுமன்றி சமஸ்கிருதம், வங்காளம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் புலமை பெற்று சிறந்து விளங்கினார். தனது சுயசரிதையை கவிதையாக எழுதிய முதல் கவிஞர் பாரதியார் ஆவார்.

2. ‘‘யாமறிந்த மொழிகளிலே’’ எனத் தொடங்கும் பாடலின் பொருளை எழுதுக.

   நான் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போன்ற இனிமையான மொழி வேறு எங்கும் இல்லை. உலகமெல்லாம் இகழும்படி சிறப்புகள் கெட்டுப்போக தமிழர் என்ற பெயரை மட்டும் கொண்டு வாழ்தல்

நல்லது அல்ல. எனவே, தேன் போன்ற இனிமையான தமிழ் மொழியின் ஓசையை உலகம் முழுவதும் பரவச் செய்திடல் வேண்டும்.

## 2. திருக்குறள்

**பக்கங்கள் 13-14**

**அ) பிரித்து எழுதுக.**

1. வியன் + உலகம்
2. தவம் + இரண்டும்
3. நெடுமை + கடல்
4. பசுமை + புல்

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. உண்மை
2. நல்லார்
3. எளிது
4. குன்றாது

**இ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. விண்இன்று
2. வாரி
3. பசும்புல்
4. தன்நீர்மை
5. ஈண்டு

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. ''மழையே அமிழ்தம்'' என்பதனை விளக்குக.
மழையின்றி இவ்வுலகம் நிலைபெறாது. எனவே, இவ்வுலகத்தில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் மழையே அமிழ்தம் ஆகும்.

2. ''துப்பார்க்குத் துப்பாய'' எனத் தொடங்கும் குறளின் விளக்கத்தை எழுதுக.
உணவு உண்பவருக்கான உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு, பருகுவோர்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும்.

3. மக்களின் வாழ்வைக் கெடுக்க வல்லதும், காக்க வல்லதும் எது?
பெய்யாமல் மக்களின் வாழ்வை கெடுக்க வல்லதும், மழையின்றி நொந்தவரின் வாழ்க்கைக்கு துணையாகக் காக்க வல்லதும் மழையே ஆகும்.

4. மழை பொய்த்துப் போனால் என்ன நிகழும்?
மழை பொய்த்துப் போனால் தெய்வத்திற்கு தினமும் நடக்கும் வழிபாடு நடக்காது. ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாவும் நடைபெறாது.

5. எது இல்லாமல் மக்களால் வாழ முடியாது? அதைக் கொடுப்பது யார்?
எவ்வளவு பெரியவரானாலும் நீர் இல்லாமல் உயிர் வாழ முடியாது. அந்நீரைக் கொடுப்பது மழையே ஆகும்.

## 3. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

**பக்கங்கள் 19-20**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அ) மூன்று 2. இ) 11 3. ஆ) அணிகலன்
4. இ) ஒழுக்கம் 5. அ) ஐந்து

**ஆ) பொருத்துக.**

1. சமண முனிவர்கள் 2. நல்லாதனார் 3. கணிமேதாவியார்
4. விளம்பி நாகனார் 5. முன்றுறை அரையனார்

**இ) சிறுவினாக்கள்:**

1. "கீழ்க்கணக்கு" என்பதன் பொருளை விளக்குக.

   "கீழ்க்கணக்கு" என்பது குறைந்த அடிகளையுடைய செய்யுட்களால் ஆனது. இந்நூல்கள் அனைத்தும் வெண்பா யாப்பில் அமைந்துள்ளன.

2. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலுள்ள நீதி நூல்களின் பெயர்களை எழுதுக.

   நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், ஏலாதி, முதுமொழிக்காஞ்சி, திருக்குறள் ஆகியன பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலுள்ள நீதி நூல்கள் ஆகும்.

3. நாலடியாரின் சிறப்புப் பெயர்கள் யாவை?

   நாலடி நானூறு, வேளாண் வேதம் என்பன நாலடியாரின் சிறப்புப் பெயர்கள் ஆகும்.

4. "நான்மணிக்கடிகை" – பெயர்க்காரணத்தை விளக்குக.

   நான்மணிக்கடிகையை இயற்றியவர் விளம்பி நாகனார். இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடலும் நான்கு மணியான கருத்துகளைக் கூறுவதால் "நான்மணிக்கடிகை" எனப் பெயர் பெற்றது. கடிகை என்றால் அணிகலன் என்று பொருள். எனவே இந்நூல் நான்கு மணிகள் கொண்ட அணிகலன் என்று அழைக்கப்படுகிறது. இதில் மொத்தம் 104 பாடல்கள் உள்ளன. நான்மணிக்கடிகையை இயற்றியவர் விளம்பி நாகனார்.

5. "இன்னா நாற்பது" நூலின் நோக்கம் என்ன?

   ஒவ்வொரு பாடலிலும் மனித வாழ்வில் துன்பத்திற்குரிய நான்கு விஷயங்களைக் கூறி அதன் மூலம் நீதி புகட்டுவதே "இன்னா நாற்பது" நூலின் நோக்கமாகும்.

6. “திரிகடுகம்” என்றால் என்ன?

“திரிகடுகம்” எனும் சொல் சுக்கு, மிளகு, திப்பிலி எனும் மூன்று மூலிகைகளால் ஆன மருந்துப்பொருட்களைக் குறிக்கும். இம்மருந்துப் பொருட்கள் எவ்வாறு உடலுக்கு நன்மை தருகின்றனவோ, அதைப்போலவே இந்நூலில் ஒவ்வொரு பாடலிலும் கூறப்படும் மூன்று கருத்துகளும் வாழ்விற்கு நன்மையைத் தருவதால் இந்நூல் “திரிகடுகம்” என்று அழைக்கப்படுகிறது. இந்நூல் 100 வெண்பாக்களால் ஆனது. இந்நூலை இயற்றியவர் நல்லாதனார்.

7. “ஆசாரக்கோவை” எதைப் பற்றி எடுத்துரைக்கிறது?

நமது அன்றாட வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளை பற்றியும், நாள்தோறும் நாம் செய்ய வேண்டிய கடமைகள் பற்றியும் ஆசாரக்கோவை எடுத்துரைக்கிறது.

8. “சிறுபஞ்சமூலம்” உணர்த்தும் ஐந்து மூலிகைகளின் பெயர்களை எழுதுக.

பஞ்சம் என்றால் ஐந்து என்றும், மூலம் என்றால் வேர் எனவும் பொருள்படும். கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியன “சிறுபஞ்சமூலம்” உணர்த்தும் ஐந்து மூலிகைகளின் பெயர்களாகும்.

9. “ஏலாதி” என்றால் என்ன?

“ஏலாதி” என்பது மருத்துவப் பெயராகும். ஏலம், இலவங்கம், நாககேசரம், சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய ஆறு மருந்துகளின் கலவையே ஏலாதி ஆகும். இந்நூல் சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உள்பட 81 வெண்பாக்களைக் கொண்டது. இந்நூலில் இடம்பெற்றுள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் ஆறு நல்ல கருத்துகளை எடுத்துரைப்பதால் ஏலாதி என அழைக்கப்படுகிறது. இந்நூலை இயற்றியவர் கணிமேதாவியார்.

10. திருக்குறளின் வேறு பெயர்கள் யாவை?

முப்பால், தெய்வநூல், தமிழ் மறை, உத்தரவேதம், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, திருவள்ளுவம் என்பன திருக்குறளின் வேறு பெயர்கள் ஆகும்.

## ஈ) பெருவினாக்கள்:

1. “நாலடியார்” – குறிப்பு வரைக.

- நாலடியார் = நான்கு + அடி + ஆர். இந்நூல் நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது.
- இதில் மொத்தமாக 400 பாடல்கள் உள்ளன.

- இந்நூலிற்கு ''நாலடி நானூறு'', ''வேளாண் வேதம்'' என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு.
- இந்நூலில் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பிரிவுகள் உள்ளன.
- இந்நூல் சமண முனிவர்கள் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு ஆகும்.
- நாலடியாரை முப்பாலாக பகுத்தவர் தருமர்; தொகுத்து அதிகாரம் வகுத்தவர் பதுமனார்.
- பதினெண்கீழ்கணக்கு நூல்களில் உள்ள ஒரே தொகைநூல்.
- ஜி.யு. போப் இந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.
- இந்நூலில் மொத்தம் 40 அதிகாரங்களும், 12 இயல்களும் உள்ளன.

  அறத்துப்பால் – 13 அதிகாரங்கள்
  பொருட்பால் – 24 அதிகாரங்கள்
  காமத்துப்பால் – 3 அதிகாரங்கள்

2. ''இனியவை நாற்பது'' நூல் பற்றி எழுதுக.

''இனியவை நாற்பது'' நூலை இயற்றியவர் பூதஞ்சேந்தனார். உலகில் நன்மை தருவன எவையெவை எனவும், இனிய கருத்துகளை நாற்பது பாடல்களில் எளிமையாக எடுத்துரைப்பதாலும் இந்நூல் இனியவை நாற்பது எனப் பெயர் பெற்றது. இந்நூலிலுள்ள ஒவ்வொரு பாடலும் மூன்று சிறந்த கருத்துகளை எடுத்துரைக்கின்றன. இந்நூலை ''இனியது நாற்பது'', ''இனிய நாற்பது'' என்றும் அழைப்பர். இந்நூலில் உள்ள அனைத்துப் பாடல்களும் வெண்பாக்களால் ஆனவை.

3. திரிகடுகத்தை இயற்றியவர் யார்? இந்நூல் திரிகடுகம் என்றழைக்கப்பட காரணம் என்ன?

திரிகடுகம் = திரி + கடுகம். திரிகடுகத்தை இயற்றியவர் நல்லாதனார். சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்று மூலிகைப் பொருட்களும் உடலுக்கு நன்மையை தருவது போல, இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடலிலும் கூறப்பட்டுள்ள மூன்று கருத்துகள் வாழ்வதற்கு நன்மை செய்வதால் இந்நூல் திரிகடுகம் என்று அழைக்கப்படுகிறது. இந்நூலில் மொத்தம் 100 வெண்பாக்கள் உள்ளன.

4. ''பழமொழி'' நூல் பற்றி எழுதுக.

பழமொழி = பழமை + மொழி. இந்நூலை இயற்றியவர் மூன்றுறை அரையனார். கடவுள் வாழ்த்து நீங்கலாக மொத்தம் 400 பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி

இடம்பெற்றுள்ளது. எனவே, இந்நூலை "பழமொழி நானூறு" என்றும் அழைப்பர். பழமொழிகள் என்பது ஒரு சமுதாயத்தில் நீண்ட காலமாகப் புழக்கத்தில் இருக்கும் அனுபவக் குறிப்புகள் ஆகும். இவை கூற விரும்பும் கருத்துகளை சுருக்கமாகவும், தெளிவாகவும், சுவையுடனும் கூற உதவுகின்றன.

5. "அறிவுரைக் கோவை" என்றழைக்கப்படும் நூல் எது? அந்நூலின் சிறப்பினை எழுதுக.
"அறிவுரைக் கோவை" என்றழைக்கப்படும் நூல் முதுமொழிக்காஞ்சி. இந்நூலின் ஆசிரியர் மதுரை கூடலூர் கிழார். இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் மிகச்சிறிய நூல் ஆகும். இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடலும் பத்து அடிகளைக் கொண்டது. இந்நூலில் மொத்தம் பத்து பாடல்கள் உள்ளன.

6. "திருக்குறள்" – குறிப்பு வரைக.
திருக்குறள் = திரு + குறள். திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். திருக்குறள் உலகப் புகழ்பெற்ற தமிழ் இலக்கியமாகும். இந்நூல் ஒரு வாழ்வியல் நூலாகும். இது மனிதர்கள் நலமுடன் வாழ தேவையான அடிப்படைப் பண்புகளை விளக்கி கூறுகிறது. இந்நூல் ஏறக்குறைய 2000 ஆண்டுகள் பழமையானது. திருக்குறள் ஏழு சீர்களைக் கொண்ட இரண்டடி வெண்பாக்களால் ஆனது. இந்நூல் 133 அதிகாரங்களையும், அதிகாரத்திற்குப் பத்து குறள்கள் வீதம் 1330 குறள்களையும் கொண்டது. இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் உட்பிரிவு 9 இயல்களைக் கொண்டது.

## 4. தமிழ் இலக்கணம்

**பக்கங்கள் 23-24**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆ) ஐந்து
2. அ) எழுத்து
3. இ) பதம்
4. ஆ) கட்டுதல்
5. இ) அழகு

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. இலக்கணம் என்றால் என்ன?
மொழியைப் பிழையின்றி பேசவும், எழுதவும் துணை செய்வது இலக்கணமாகும். ஒருவர் தாம் கூறும் கருத்தை பிழையின்றி பிறர் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவாக கூறுவதற்கு இலக்கணம் உதவுகிறது.

2. இலக்கணத்தின் வகைகள் யாவை?
தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை எழுத்து, சொல், பொருள், யாப்பு மற்றும் அணி இலக்கணம்.

3. எழுத்து இலக்கணம் என்றால் என்ன?
எழுத்து என்பது மொழிக்கு ஒலி வடிவம், வரி வடிவம் ஆகியவற்றைக் கொடுக்கிறது. மேலும் தமிழ் எழுத்துகளின் எண், பெயர், பிறப்பு, முறை, உருவம், மாத்திரை, முதல், ஈறு, இடைநிலை, போலி, பதம், புணர்ப்பு ஆகிய பன்னிரண்டையும் விளக்கி கூறுகிறது. எழுத்துகள் முதலெழுத்துகள், சார்பெழுத்துகள் என இரு வகைப்படும்.

4. சொல் இலக்கணம் – விளக்குக.
ஓர் எழுத்து தனித்து நின்றோ அல்லது பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது சொல் எனப்படும். பதம், மொழி, கிளவி என்பன சொல்லின் வேறு பெயர்கள்.

5. சொல் இலக்கணத்தின் வகைகள் யாவை?
பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என சொல் இலக்கணம் நான்கு வகைப்படும்.

6. பொருள் இலக்கணத்தை விளக்குக.
தமிழ் மொழிக்கே உரியதாகவும், சிறப்பானதாகவும் அமைந்திருப்பது பொருள் இலக்கணமாகும். தமிழ் இலக்கியங்களில் உள்ள செய்யுள்களின் அமைப்பு, ஓசை, பா வகை போன்றவற்றை விளக்கி கூறுவது பொருள் இலக்கணம் ஆகும். அகப்பொருள், புறப்பொருள் என பொருள் இலக்கணம் இரண்டு வகைப்படும்.

7. யாப்பிலக்கணம் என்றால் என்ன?
செய்யுள் இயற்றுவதற்குரிய இலக்கணத்தைக் குறிப்பது யாப்பு இலக்கணம் ஆகும். “யாத்தல்” என்றால் கட்டுதல் என்று பொருள்.

8. யாப்பிலக்கணத்தின் உறுப்புகளை எழுதுக.
எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பன யாப்பின் ஆறு உறுப்புகள் ஆகும்.

9. அணி இலக்கணம் என்றால் என்ன?
அணி என்னும் சொல்லிற்கு அழகு என்பது பொருள். தமிழ் இலக்கியங்களில் உள்ள செய்யுள்களின் சொல்லழகு, பொருளழகு ஆகியவற்றை விரிவாக எடுத்துரைப்பது அணி இலக்கணம் ஆகும்.

10. அணி இலக்கணம் பற்றிக் கூறும் நூல் யாது?
அணி இலக்கணம் பற்றி விரிவாகவும், தெளிவாகவும் கூறும் தொன்மையான நூல் “தண்டியலங்காரம்” ஆகும்.

## 5. விருப்பமானதைக் கொடு!

**பக்கம் 29**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. ஆறுமுகத்தின் கவலை என்ன? அதற்கு ஆறுதல் கூறியவர் யார்?
   ஆறுமுகம் நோய்வாய்ப்பட்டு இறக்கும் தருவாயில் இருந்ததால், தனது மகன் கண்ணனை இனிமேல் யார் கவனித்து கொள்வார்கள் என கவலை பட்டார். ஆறுமுகத்திற்கு ஆறுதல் கூறியவர் அவரது நண்பர் மணிமாறன்.

2. ஆறுமுகம் தன் நண்பனிடம் பணப்பையைக் கொடுத்து என்ன கூறினார்?
   ஆறுமுகம் தன் நண்பனிடம் பணப்பையை கொடுத்து, அதில் ஆயிரம் பொற்காசுகள் இருப்பதாகவும், தனது மகன் பெரியவனானதும் அவருக்கு விருப்பமான பொற்காசுகளை அவனுக்கு தருமாறும் கூறினார்.

3. மணிமாறன் கண்ணனுக்கு எவ்வளவு பொற்காசுகள் கொடுத்தார்? அதற்கு அவர் கூறிய காரணமென்ன?
   மணிமாறன் கண்ணனுக்கு பத்து பொற்காசுகளை கொடுத்தார். மேலும் கண்ணனுக்கு 10 பொற்காசுகளை மட்டுமே கொடுக்க விரும்புவதாகவும் கூறினார்.

4. நீதிபதி மரியாதைராமன் கண்ணனுக்கு எவ்வாறு நியாயம் வழங்கினார்?
   ஆறுமுகம் கொடுத்த ஆயிரம் பொற்காசுகளில் மணிமாறன் விரும்பியது தொள்ளாயிரத்து தொண்ணூறு எனவும், ஆறுமுகம் கூறியது போல உங்களுக்கு விருப்பமான தொள்ளாயிரத்து தொண்ணூறு பொற்காசுகளை கண்ணனிடம் கொடுக்குமாறும் கூறினார்.

5. ‘‘விருப்பமானதைக் கொடு’’ என்ற கதையிலிருந்து நீ கற்றுக் கொண்ட நீதி என்ன?
   நாம் ஒருபோதும் மற்றவரின் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது. ஆசை ஆபத்தில் முடியும் என்பதை உணர்ந்து வாழ வேண்டும்.

## 6. வாழ்த்து

**பக்கம் 32**

**அ) பிரித்து எழுதுக.**

1. திரு + அடி  2. கலை + எல்லாம்  3. பருவம் + மழை

**ஆ) வினாவிற்கு விடையளி.**

1. கவிமணி இறைவனிடம் வேண்டுவன யாவை?

   கவிமணி இறைவனிடம் நாட்டில் அறம் பெருக வேண்டும். உண்மை நிலைபெற வேண்டும். பருவமழை பெய்து பயிர்கள் செழிக்க வேண்டும். மேன்மை பொருந்திய கலைகள் எல்லாம் வளர வேண்டும். மக்கள் பிற உயிர்களிடத்தில் கருணை கொண்டு வாழ வேண்டும். இவை அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும் என கவிமணி இறைவனிடம் வேண்டினார்.

## 7. திரிகடுகம்

**பக்கங்கள் 33-34**

**அ) பிரித்து எழுதுக.**

1. அறம் + வினை  2. கார் + ஆண்மை  3. ஊர் + ஆண்மை

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. நல்லாதனார்  2. நாணுதல்
3. பொறுத்துக் கொள்ளுதல்  4. உதவி செய்தல்

**இ) சிறுவினாக்கள்:**

1. திரிகடுகம் என்பது எவற்றின் கலவை?

   திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று மருந்துப் பொருட்களின் கலவை ஆகும்.

2. எதை எண்ணி நாணுதல் வேண்டுமென திரிகடுகம் கூறுகிறது?

   பிறர் தன்னை உயர்த்தி பேசும்போது நாணுதல் வேண்டும் என திரிகடுகம் கூறுகிறது.

3. எதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்?

   பிறர் தம்மை இகழ்ந்து பேசும்போது பொறுத்துக் கொள்ள வேண்டும்.

**ஈ) பெருவினாக்கள்:**

1. திரிகடுகம் – குறிப்பு வரைக.

   திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றையும் குறிக்கும். இம்மூன்று மருந்துப் பொருட்களால் ஆகிய திரிகடுகம் என்னும் மருந்து உடல்நலத்தைப் பேணிப் பாதுகாக்க உதவும். அதுபோலவே, இந்நூலில் மும்மூன்றாக உரைக்கப்பெற்ற செய்யுட்களில் கூறப்படும் அறங்கள் உயிர் நலம் பேணுவனவாகும். எனவே, இந்நூல் "திரிகடுகம்" என்று அழைக்கப்படுகிறது.

2. ஊராண்மைக்குரிய செல்வங்கள் எவையென நல்லாதனார் கூறுகிறார்?

பிறர் தம்மை உயர்த்தி பேசும்போது நாணுதலும், பிறர் தம்மை தாழ்த்தி பேசும்போது பொறுத்துக் கொள்ளுதலும், பிறர்க்கு கைமாறு கருதாமல் உதவி செய்தலும் ஊராண்மைக்குரிய செல்வங்கள் ஆகும்.

## 8. தமிழ்நாட்டின் தங்கமகன் மாரியப்பன்

**பக்கங்கள் 37-38**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அ) சேலம்  2. ஆ) 5  3. ஆ) உயரம் தாண்டுதலில்

4. இ) 1.78 மீட்டர்  5. அ) துனிசியா

**ஆ) சிறுவினாக்கள்:**

1. மாரியப்பன் எங்கே, எப்போது பிறந்தார்?

மாரியப்பன் சேலம் மாவட்டம் தீவட்டிப்பட்டியை அடுத்து பெரிய வடகம்பட்டி என்னும் ஊரில் 1995 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் நாள் பிறந்தார்.

2. மாரியப்பனின் பெற்றோர் யாவர்?

மாரியப்பனின் பெற்றோர் தங்கவேல் – சரோஜா ஆவர்.

3. மாரியப்பனின் பயிற்சியாளரின் பெயர் என்ன?

மாரியப்பனின் பயிற்சியாளரின் பெயர் சத்தியநாராயணன்.

4. ரியோ பாரா ஒலிம்பிக் போட்டியில் மாரியப்பன் தாண்டிய உயரம் என்ன?

ரியோ பாரா ஒலிம்பிக் போட்டியில் மாரியப்பன் தாண்டிய உயரம் 1.89 மீட்டர் ஆகும்.

5. ரியோ பாரா ஒலிம்பிக் 2016 இல் மாரியப்பன் வென்ற பதக்கம் யாது?

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற ரியோ ஒலிம்பிக் தொடரில் மாரியப்பன் தங்கப் பதக்கம் வென்றார்.

**இ) பெருவினாக்கள்:**

1. மாரியப்பனின் குடும்பம் பற்றி எழுதுக.

மாரியப்பன் ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவர். இவரது பெற்றோர் தங்கவேல் – சரோஜா ஆவர். மாரியப்பனுக்கு இரு சகோதரர்களும், ஒரு சகோதரியும் உள்ளனர். இவரின் தாயார் மிதிவண்டியில் காய்கறி வியாபாரம் செய்து குழந்தைகளை வளர்த்தார்.

2. பேருந்து விபத்தில் மாரியப்பனுக்கு என்ன நிகழ்ந்தது என்பதை விவரி.

மாரியப்பனின் ஐந்தாவது வயதில் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது. அந்த விபத்தில் பேருந்தின் சக்கரம் அவரின் வலது காலில் ஏறியதால் வலது கால் கட்டை விரல் இடம் மாறியது. மேலும் முழங்காலின் கீழே சிதைந்து போனது.

3. ரியோ பாரா ஒலிம்பிக்கில் மாரியப்பன் தங்கம் வென்ற நிகழ்வை எழுதுக.

2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் துனிசியாவில் நடந்த ஐ.பி.சி. கிராண்ட் பிரிக்ஸ் தொடரில் 1.78 மீட்டர் உயரம் தாண்டி ரியோ பாரா ஒலிம்பிக் போட்டியில் இந்தியா சார்பாக உயரம் தாண்டுதல் பிரிவில் பங்கேற்க தகுதி பெற்றார் மாரியப்பன். 2016 ஆம் ஆண்டு ரியோ நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் உயரம் தாண்டுதல் பிரிவில் பங்கேற்ற மாரியப்பன் 1.89 மீட்டர் உயரம் தாண்டி தங்கப் பதக்கத்தை தன் வசமாக்கினார். 2013 ஆம் ஆண்டு தான் தவறவிட்ட பதக்கத்தை மூன்று ஆண்டு கால விடாமுயற்சியின் மூலம் வென்றார்.

4. மாரியப்பன் பெற்ற விருதுகள் மற்றும் சிறப்புகள் பற்றி எழுதுக.

மத்திய அரசு மாரியப்பனுக்கு அர்ஜூனா விருது மற்றும் பத்மஸ்ரீ விருது அளித்து பெருமைப்படுத்தியுள்ளது. சேலம் தபால்துறை “மை ஸ்டாம்ப்” என்ற திட்டத்தின் கீழ் மாரியப்பனின் அஞ்சல் தலையை வெளியிட்டு சிறப்பித்துள்ளது.

## 9. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்

**பக்கம் 41**

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. எழுவாய் 2. வினைச்சொல் 3. அம்மா
4. வில் 5. செய்யப்படுபொருள்
6. பெயர்ச்சொல்

### ஆ) வினாக்களுக்கு விடையளி.

1. எழுவாய் என்பது யாது? எடுத்துக்காட்டு தருக.

எழுவாய் என்பது பெயர்ச்சொல் ஆகும். இது பெரும்பாலும் ஒரு வாக்கியத்தின் முதலிலேயே வரும். சில நேரங்களில் இறுதியிலும் வரலாம். ஆனால், பொருள் மாறுபடக் கூடாது. குறிப்பிட்ட செயலை செய்தவரைக் குறிப்பது எழுவாய். யார், எது, எவை போன்ற வினாக்களுக்கு விடையாக அமைவதும் எழுவாய் ஆகும்.

எ.கா. அம்மா சோறு ஊட்டினாள்.

மேற்கண்ட எடுத்துக்காட்டில் "அம்மா" என்பது எழுவாய் ஆகும். இது "யார்?" என்னும் வினாவிற்கு விடையாக அமைகிறது.

2. பயனிலை என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

பயனிலை என்பது வாக்கியத்தில் அமைந்துள்ள வினைச்சொல் ஆகும். இது வாக்கியத்தின் இறுதியில் அமையும்.

எ.கா. அன்பு பாடம் படித்தான்.

மேற்கண்ட எடுத்துக்காட்டில் "படித்தான்" என்பது பயனிலை ஆகும்.

3. செயப்படுபொருள் என்றால் என்ன? அது எவ்வினாக்களுக்கு விடையாக அமையும்?

குறிப்பிட்ட ஒரு செயல் நடைபெற எழுவாய்க்கு உதவியாக அமைவது செய்யப்படுபொருள் ஆகும். இது ஒரு வாக்கியத்தில் எழுவாய்க்கும், பயனிலைக்கும் இடையில் அமைந்திருக்கும்.

எ.கா. இராமன் வில்லை ஒடித்தான்.

மேற்கண்ட எடுத்துக்காட்டில் "வில்" என்பது செயப்படுபொருள் ஆகும்.

4. வாக்கிய அமைப்பு – விளக்குக.

ஒரு வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் அமைந்திருக்கும். ஒரு சில வாக்கியங்களில் எழுவாய் மற்றும் பயனிலை மட்டுமே அமைந்திருந்தாலும் அவை முழுப் பொருளை உணர்த்தும்.

எ.கா. இனியா பாடல் பாடினாள்.

மேற்கண்ட எடுத்துக்காட்டில் "இனியா" என்பது எழுவாய், "பாடல்" என்பது செயப்படுபொருள், "பாடினாள்" என்பது பயனிலை ஆகும்.

## 10. யாருக்கு வணக்கம்?

**பக்கம் 45**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. அருளப்பனை அவன் ஊர் மக்கள் மதிக்காதது ஏன்?

அருளப்பன் பணமோ, பொருளோ இல்லாத ஏழை என்பதனால் அந்த ஊர் மக்கள் அவனை மதிப்பதில்லை.

2. அருளப்பனுக்கு இறைவன் செய்த உதவி யாது?

அருளப்பனுக்கு உதவ வேண்டும் என்று நினைத்த இறைவன் அவன் வயலில் வேலை செய்யும்போது தங்கக் காசுகள் நிரம்பிய ஒரு புதையலை அவன் கண்ணில் படுமாறு செய்தார்.

3. புதையல் கிடைத்ததும் அருளப்பன் என்ன செய்தான்?
அருளப்பன் தனக்கு கிடைத்த புதையலில் இருந்த தங்கக் காசுகளை கொஞ்சம் கொஞ்சமாக விற்று நிறைய சொத்துகளை வாங்கினான். அதன் பின்னர் அந்த ஊரில் யாரும் கட்டாத அளவிற்கு பெரிய வீடு ஒன்றையும் கட்டினான்.

4. தனக்கு வணக்கம் கூறியவர்களுக்கு அருளப்பன் அளித்த பதில் என்ன?
அருளப்பன் யார் தனக்கு வணக்கம் கூறினாலும் அவர்களுக்குப் பதில் வணக்கம் கூறாமல் அவர்களைப் பார்த்து, “நான் போய்ச் சொல்கிறேன்” என்று பதிலளித்தான்.

5. “யாருக்கு வணக்கம்?” என்ற கதையின் நீதியை எழுதுக.
நாம் எப்போதும் சக மனிதர்களை மதித்து வாழ வேண்டும். அவர்களிடம் இருக்கும் பணம், பொன், பொருள், பதவி, நிலம், ஆடை அணிகலனைப் பார்த்து மதிக்க கூடாது. அனைவரையும் சமமாக மதித்து வாழ்வதே உண்மையான மனிதத்தன்மை ஆகும்.

## 11. இன்னா நாற்பது

### பக்கம் 48

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அ) துன்பம் 2. ஆ) மணம் 3. இ) தெளிவு
4. ஆ) இன்னா 5. இ) ஆற்றல்

**ஆ) சிறுவினாக்கள்:**

1. யாரின் கடும்மொழி துன்பம் தரும்?
அறத்தை விரும்பும் நெஞ்சத்தினர் கூறும் கடும்மொழி துன்பத்தை தரும்.

2. எவரின் கொடைத் தன்மை துன்பமாகும்?
வறுமை உடையவரது கொடைத் தன்மை துன்பமாகும்.

3. எதன் அழகு துன்பமாகும்?
மணமில்லாத மலரின் அழகு துன்பமாகும்.

4. யார் கூறும் சொற்கள் துன்பமாகும்?
சொற்களின் நுட்பத்தை அறியாதவன் கூறும் சொற்கள் துன்பமாகும்.

**இ) பெருவினாக்கள்:**

1. ‘‘அற மனத்தார்’’ எனத் தொடங்கும் பாடல் கூறும் நான்கு கருத்துகளை எழுதுக.
   அறத்தை விரும்பும் நெஞ்சத்தினர் கூறும் கடும்மொழி துன்பமாகும். வீரம் பொருந்தியவர்கள் போரில் சோம்பலுடன் இருப்பது துன்பமாகும். வறுமை உடையவரது கொடைத் தன்மை துன்பமாகும். கொடுமை உடையாரின் வாய்ச் சொல்லும் துன்பமாகும்.

2. ‘‘ஆற்றல் இலாதான்’’ என்ற பாடலின் பொருளை எழுதுக.
   வலிமையில்லாதவனின் கையில் பிடித்த ஆயுதம் துன்பமாகும். மணமில்லாத மலரின் அழகு துன்பமாகும். தெளிவு இல்லாதவன் செய்யும் வேலை துன்பமாகும். அதைப்போலவே சொற்களின் நுட்பத்தை அறியாதவனின் சொற்களும் துன்பமாகும்.

3. ‘‘இன்னா நாற்பது’’ – நூல் குறிப்பு வரைக.
   ‘‘இன்னா நாற்பது’’ என்பது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். இது கி.பி. நான்காம் நூற்றாண்டை சார்ந்த நூலாகும். இந்நூலில் உள்ள செய்யுள்கள் இன்னிசை வெண்பாக்களால் ஆனவை. ஒவ்வொரு பாடலிலும் நான்கு கருத்துகளைக் கொண்டு, ஒவ்வொன்றையும் ‘‘இன்னா’’ என எடுத்துக் கூறுவதால் இந்நூல் ‘‘இன்னா நாற்பது’’ என்னும் பெயர் பெற்றது. இந்நூலில் மொத்தமாக 164 கூடாச் செயல்கள் பற்றி கூறப்பட்டுள்ளன.

## 12. சுற்றுப்புறச் சூழலைக் காத்திடுவோம்!

**பக்கம் 50**

**அ) சிறுவினாக்கள்:**

1. சுற்றுப்புறத்தைப் பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும்?
   சுற்றுப்புறத்தை பாதுகாக்க நாம் குப்பைகளை கொட்டாமல் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

2. வேண்டாக் குப்பையை என்ன செய்யலாம்?
   வேண்டாத குப்பைகளை தவிர்த்து குப்பைத் தொட்டியில் போட வேண்டும்.

3. புகையால் ஏற்படும் தீங்கு யாது?
   வாகனங்கள் வெளியிடும் புகையினால் உடல்நலக் குறைபாடு ஏற்படும்.

4. இரைச்சலின் தீமையை எழுதுக.
   சாலைகளில் செல்லும் வாகனங்கள் ஏற்படுத்தும் இரைச்சலினால் நம் கவனம் சிதறும்.

5. பூங்கோவன் பெற்ற விருதுகள் யாவை?
பூங்கோவன் கவிவாணர், கவிமாமணி போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார்.

**ஆ) பெருவினாக்கள்:**

1. சுற்றுப்புறம் தூய்மையாக இல்லையென்றால் ஏற்படும் இன்னல்கள் யாவை?
தேவையில்லாத குப்பைகளை தவிர்த்து, நாம் நமது சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். சுற்றுப்புறம் தூய்மையாக இல்லையெனில் தொற்றுக் கிருமிகளின் மூலம் நமக்கு பல நோய்கள் ஏற்படும்.

2. "சுற்றுப்புறச் சூழலைக் காத்திடுவோம்" என்ற பாடல் மூலம் கவிஞர் பூங்கோவன் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
தேவையில்லாத குப்பைகளை தவிர்க்க வேண்டும். குப்பைகளை குப்பைத் தொட்டியில் போட வேண்டும். இதனால் கொடிய நோய்களை பரப்பும் கிருமிகள் நம்மை சேராமல் அந்த கிருமிகளினால் ஏற்படும் தொல்லைகளை தவிர்க்க முடியும். மேலும், நமது சுற்றுப்புறம் மாசடையாமல் இருக்க நாம் அனைவரும் முனைந்து செயல்பட வேண்டும். சாலைகளில் செல்லும் வாகனங்கள் வெளியிடும் புகையினால் நமது உடல்நலம் பாதிக்கப்படுகிறது. வாகனங்கள் பரப்பும் ஒலியினால் நமது கவனமும் சிதறும் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஆகவே, நமது பூமியின் சுற்றுப்புறத்தை நாம் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்பதே கவிஞர் பூங்கோவன் கூறும் கருத்துகள் ஆகும்.

## 13. நாட்டுப்புறக் கலைகள்

**பக்கங்கள் 55-56**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆ) மன
2. இ) நாடக
3. அ) கோலாட்டம்
4. இ) குமரி
5. ஆ) சிலம்பம்

**ஆ) பொருத்துக.**

1. புலி வேடம்
2. கரகாட்டத்தின் துணையாட்டம்
3. தோல், மர பொம்மைகள்
4. ஒரே நிறக் கைக்குட்டை, சலங்கை
5. சிறிய சொம்பு, குடம்

**ஆ) சிறுவினாக்கள்:**

1. "கலை" என்பதன் பொருள் யாது?

   கலை என்றால் கற்பதற்கு உரியவை என்று பொருள். அதாவது கற்றுக் கொள்வதற்குரிய அனைத்தும் கலை என்றழைக்கப்படுகிறது. கலை என்பது மனிதர்களின் மன உணர்வுகளின் வெளிப்பாடு ஆகும்.

2. "நாட்டுப்புறக் கலைகள்" என்றால் என்ன?

   மனிதர்களோடும், மண்ணோடும் தொடர்புடைய கலைகளே நாட்டுபுறக் கலைகள் ஆகும். இக்கலைகள் நம் பண்பாடு, பாரம்பரியம், பழக்க வழக்கம், நம்பிக்கைகள், எண்ணங்கள், சிந்தனைகளை உலகிற்கு பிரதிபலித்துக் காட்டப் பயன்படுகின்றன.

3. கரகாட்டம் பற்றி எழுதுக.

   ஆடி மாதத்தில் கிராமங்களில் நடைபெறும் மாரியம்மன் கோவில் திருவிழாக்களில் மலர்கள், வண்ணக் காகிதங்கள் கொண்டு ஒப்பனை செய்யப்பட்ட சிறிய சொம்பையோ அல்லது குடத்தையோ தலையில் வைத்துக்கொண்டு ஆடுவதே கரகாட்டம் ஆகும். இந்த ஆட்டத்தை ஆண்களும், பெண்களும் இணைந்து ஆடுவார்கள்.

4. வில்லுப்பாட்டு என்றால் என்ன?

   தமிழக நாட்டுப்புறக் கலைகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தது வில்லுப்பாட்டு ஆகும். இக்கலையின் பிறப்பிடம் குமரி மாவட்டம். இப்பாடலில் கதைப் பாடல்களைப் பாடிக் காட்டுவார்கள். வில்லுப்பாட்டில் குறைந்தபட்சம் ஐந்து நபர்கள் இருப்பார்கள்.

5. "பாவைக் கூத்து" என்றழைக்கப்படுவது எது?

   பாவைக் கூத்து என்றழைக்கப்படுவது பொம்மலாட்டம் ஆகும். பொம்மைகளை நூலில் கட்டி திரைக்குப் பின்னால் இருந்து இயக்கியபடி கதைகள் சொல்வதே பொம்மலாட்டம் ஆகும். இதில் தோல் மற்றும் மர பொம்மைகள் வண்ணமிகு ஆடைகளால் அலங்கரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

**ஈ) பெருவினாக்கள்:**

1. கலை என்றால் என்ன? சிறு குறிப்பு தந்து விளக்குக.

   தமிழில் கலை என்றால் கற்பதற்கு உரியவை என்று பொருள். கற்றுக் கொள்வதற்குரிய அனைத்தும் கலை என்றழைக்கப்படுகிறது. கலை என்பது மனித உணர்வுகளின் வெளிப்பாடு ஆகும். ஒரு நாட்டின் கலை, கலாச்சாரம் என்பன அச்சமூகத்தினை அப்படியே உலகிற்கு எடுத்துக் கூறும் சிறந்த கருவிகள். கலை என்பது வெறும் பொழுதுபோக்காக மட்டும் இல்லாமல் தகவல் பரப்பும் ஊடகமாகவும், கலாச்சாரத்தைப் பரப்பும் கருவியாகவும் உள்ளது.

2. தமிழக நாட்டுப்புறக் கலைகளின் பெயர் ஏதேனும் பத்தினை எழுதுக.
ஒயிலாட்டம், மயிலாட்டம், கும்மியாட்டம், கோலாட்டம், காவடியாட்டம், வில்லுப்பாட்டு, கரகாட்டம், பொம்மலாட்டம், புலியாட்டம், தெருக்கூத்து.

3. காவடியாட்டம், கும்மியாட்டம் பற்றி எழுதுக.
   - காவடியாட்டம்: தமிழகத்தில் முருகப்பெருமானை வழிபடும் நிகழ்வின் ஒரு பகுதியாக காவடியாட்டம் ஆடப்படுகிறது. ஒரு தண்டின் மீது வில் போன்று வடிவமைத்து, அதை வண்ணக் காகிதங்கள், மலர்கள் மற்றும் மயில் இறகுகள் கொண்டு அலங்காரம் செய்து காவடியைத் தயார் செய்வார்கள். பின்னர் தோளில் சுமந்து கொண்டு நுணுக்கமான ஆடல் திறனும், கலைத்திறனும் கொண்டு ஆடுவார்கள்.
   - கும்மியாட்டம்: தமிழ்நாட்டில் கும்மியாட்டம் முக்கிய இடத்தை பிடித்துள்ளது. எல்லாவிதமான நிகழ்ச்சிகள், விழாக்களிலும் கும்மியாட்டம் ஆடப்படுகிறது. கும்மி ஆடும்போது முதலில் ஒருவர் பாடுவார். பிறகு அதனைத் தொடர்ந்து மற்ற ஆண்களும், பெண்களும் குழுவாக சேர்ந்து பாடிக் கொண்டே வருவர். இந்த ஆட்டத்தை ஆடும்போது ஆண்களும், பெண்களும் வட்ட வடிவில் குழுவாக நின்று கொண்டு, தங்களின் இரு கைகளையும் தட்டி ஒலியெழுப்பிக் கொண்டே சுற்றி வருவர்.

4. தெருக்கூத்து – குறிப்பு வரைக.
தெருக்கூத்து நாடக வடிவில் நடத்தப்படும் ஒரு புகழ்பெற்ற நாட்டுப்புறக் கலையாகும். தெருக்கூத்தில் மகாபாரதம், இராமாயணம், பொன்னர் சங்கர் கதை, வள்ளி திருமணம் போன்ற கதைகள் நடித்துக் காட்டப்படுகின்றன. திருவிழா போன்ற முக்கிய விழாக்களின் இரவுப் பொழுது முதல் விடியற்காலை வரை இக்கூத்துகள் நடைபெறும். கோவில் அல்லது திறந்த மைதானத்தில் மேடை அமைக்கப்படும். மேடையின் முன்பக்கம் மக்கள் அமர்ந்து பார்ப்பர். மேடையின் மீதுள்ள திரைச்சீலையின் பின்புறம் இசைக் கலைஞர்கள் இருப்பர். இதில் நடிக்கும் கலைஞர்கள் அவர்கள் நடிக்கும் கதாப்பாத்திரங்களைப் போலவே ஒப்பனை செய்து கொண்டு நடிப்பர்.

5. புலியாட்டம், மயிலாட்டம் இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடுகளை எழுதுக.

| புலியாட்டம் | மயிலாட்டம் |
|---|---|
| 1. புலிவேடமிட்டு ஆடப்படும் ஆட்டம்.<br>2. புலி பற்றிய அறிவும், புலியின் இயல்பும் தெரிந்து இருக்க வேண்டும்.<br>3. புலி போல உறுமிக்கொண்டு பதுங்கியும், அங்கும் இங்கும் பாய்ந்தும் ஆடுவர். | 1. மயிலின் தோகையை உடையுடன் சேர்த்து, அதை ஒடுக்கியும் விரித்தும் ஆடும் ஆட்டம்.<br>2. இது மயிலின் அசைவுகளைப் போன்று அமையும்.<br>3. மயில் போல மெதுவாக அசைந்து அசைந்து ஆடுவர். |

## 14. வினா எழுத்துகள்

**பக்கங்கள் 58-59**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இ) ஐந்து 2. ஆ) எ, யா 3. அ) இரு
4. ஆ) அகவினா 5. அ) தருவாள் + ஆ

**ஆ) கீழ்வரும் சொற்களை அகவினா, புறவினா என வகைப்படுத்துக.**

| அகவினா | புறவினா |
|---|---|
| என்ன ? | எம்மரம்? |
| எங்கு? | யாரோ? |
| எது? | படிப்பானோ? |
| ஏன்? | வருவாளா? |
| யார்? | நிற்பாளா? |
| எங்கே? | நீங்களா? |
| யாது? | அவனா? |

**இ) கீழ்வரும் வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றுக.**

1. திருக்குறளை இயற்றியவர் யார்?
2. கண்ணன் எங்கு சென்றான்?
3. கடிதம் எழுதியது யார்?
4. பாரதியார் எங்கு பிறந்தார்?
5. வேகமாக ஓடியது எது?

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. வினா எழுத்துகள் என்றால் என்ன?
   வினாப்பொருளைக் குறிக்கும் எழுத்துகள் வினா எழுத்துகள் எனப்படும்.

2. வினா எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
   தமிழில் மொத்தம் ஐந்து வினா எழுத்துகள் உள்ளன. அவை ஆ, எ, ஏ, ஒ, யா.

3. அகவினா என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
   ஒரு சொல்லின் உள்ளேயே நின்று வினாப்பொருளைத் தருவது அகவினா எனப்படும்.
   எ.கா. என்ன? எங்கு? எது? ஏன்? யார்?

4. புறவினா என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
   ஒரு சொல்லின் வெளியே நின்று வினாப்பொருளைத் தருவது புறவினா எனப்படும்.
   எ.கா. எம்மரம்? யாரோ? அவளா? நின்றானா? தருவாளா?

## 15. மன நிம்மதி!

**பக்கம் 63**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. முல்லா எங்கே ஓய்வெடுத்தார்?
   முல்லா சாலை ஓரம் இருந்த ஒரு மரத்தின் நிழலில் ஓய்வெடுத்தார்.

2. முல்லா தூங்குவதைப் பார்த்த பெரியவரின் எண்ணம் யாது?
   முல்லா படுத்தவுடன் தூங்கியதைக் கண்ட அந்தப் பெரியவர், "எவ்வளவு நிம்மதியாக தூங்குகிறார் இவர்!" என்று எண்ணினார்.

3. முல்லா ஏன் பெரியவரின் பணப்பையை எடுத்துக் கொண்டு ஓடினார்?
   பெரியவர் சிறிது நேரமாவது மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். தொலைந்து போன பணம் கிடைத்துவிட்டால் நிம்மதியும், மகிழ்ச்சியும் கிடைக்கும் என நினைத்ததால் முல்லா பெரியவரின் பணப்பையை எடுத்துக் கொண்டு ஓடினார்.

4. பெரியவர் முல்லாவிடம் கேட்ட சந்தேகம் யாது?
   முல்லா ஒரு செல்வந்தரும் அல்ல; வறுமையில் வாடுபவரும் அல்ல. முல்லாவினால் எப்படி படுத்தவுடனேயே நிம்மதியாக தூங்க முடிகிறது என பெரியவர் முல்லாவிடம் கேட்டார்.

5. நிம்மதி பெறுவதற்கான வழியாக முல்லா கூறியதென்ன?
   எந்தப் பொருள் மீதும் அதிக அளவு ஆசை கொள்ளாமல் இருந்தால்

நிம்மதி தானாகக் கிடைத்து விடும். எனவே, ஆசைகளை அறவே விட்டுவிட வேண்டும் என்று முல்லா கூறினார்.

## 16. திருக்குற்றாலக் குறவஞ்சி!

**பக்கம் 66**

**அ) சிறுவினாக்கள்:**

1. குற்றால நாட்டில் அஞ்சி ஓடுவது எது?
   குற்றால நாட்டில் அஞ்சி ஓடுவது பூக்களை சுமந்து வரும் நீர் மட்டுமே ஆகும்.

2. "வாடக் காண்பது" எது?
   குற்றால நாட்டில் வாழும் மக்கள் நோய், வறுமையால் வாடுவதில்லை. மாறாக, அந்நாட்டில் வாழும் பெண்களின் இடை மட்டுமே மெலிந்து வாடுகிறது.

3. குற்றாலத்தில் புலம்புவது யார்?
   குற்றாலத்தில் புலம்புவது குழந்தைகள் காலில் அணிந்திருக்கும் கிண்கிணிகளே ஆகும்.

4. குற்றால நாட்டு மக்கள் எதைத் தேடிச் செல்வர்?
   குற்றால நாட்டு மக்கள் அறம், பெருமை ஆகிய இரண்டை மட்டுமே தேடிச் செல்வர்.

5. திருக்குற்றாலக் குறவஞ்சி நூலை இயற்றியவர் யார்? அவர் எங்கு பிறந்தார்?
   திருக்குற்றாலக் குறவஞ்சி நூலை இயற்றியவர் திரிகூடராசப்பக் கவிராயர். இவர் திருநெல்வேலி மாவட்டம் தென்காசிக்கு அருகிலுள்ள மேலகரம் என்ற ஊரில் பிறந்தார்.

**ஆ) பெருவினாக்கள்:**

1. திருக்குற்றாலக் குறவஞ்சி – குறிப்பு வரைக.
   திருக்குற்றாலக் குறவஞ்சி தமிழ் சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகும். இந்நூல் தமிழ்நாட்டில் தென்காசிக்கு அருகிலுள்ள "குற்றாலம்" என்னும் ஊரின் சிறப்பையும், புகழையும் போற்றிப் பாடப்பட்டதாகும். இந்நூலை இயற்றியவர் திரிகூடராசப்பக் கவிராயர் ஆவார்.

2. குற்றால மலைவளம் பற்றி எழுதுக.
   குற்றாலநாதராகிய சிவபெருமான் வாழும் குற்றால நாட்டில் வாழும் மக்கள் எங்கும் அஞ்சி ஓடுவதில்லை. அந்த நாட்டை விட்டு ஓடுவது பூக்களை சுமந்து வரும் நீர் மட்டுமே ஆகும். அந்த நாட்டில் வாழும் மக்கள் அடங்கி இருப்பதில்லை; மாறாக, அந்நாட்டில் அடங்கி

இருப்பது தவம் செய்வோரின் உள்ளம் ஆகும். குற்றால நாட்டில் வாழும் மக்கள் நோய், வறுமையால் வாடுவதில்லை; மாறாக, அங்கு வாழும் பெண்களின் இடை மட்டுமே மெலிந்து வாடுகிறது. குற்றால நாட்டில் வாழும் மக்கள் யாரும் வருத்தப்படுவதில்லை; முத்துகளை ஈனும் சங்குகள் மட்டுமே வருத்தமடைகின்றன. அந்த நாட்டில் பயன் அற்றவை என எதையும் தூக்கிப் போடுவதில்லை; அந்நாட்டு நிலத்தில் தூக்கிப் போடப்படுவது நெல்மணி போன்ற விதைகளே ஆகும். குற்றால நாட்டில் வாழும் மக்கள் யாரும் புலம்புவதில்லை; மாறாக, குழந்தைகள் காலில் அணிந்திருக்கும் கிண்கிணிகளே புலம்பி ஒலி எழுப்பும். குற்றால மக்கள் யாரும் செல்வங்களைத் தேடி அலைவதில்லை; மாறாக, அந்நாட்டில் மக்கள் அறம், பெருமை ஆகிய இரண்டை மட்டுமே தேடுவார்கள். இத்தகைய பெருமை மிகுந்த நாடே திருக்குற்றால நாடாகும்.

## 17. வேலைகளல்ல, வேள்விகளே!

**பக்கம் 68**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. பூமி
2. வெற்றி
3. தூக்கமின்மை
4. வெளிச்சம்
5. மேற்கு

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. மூடத்தனம்
2. கைகளில்
3. உனக்கில்லை
4. குவளை என்னும் சிற்றூர்
5. ராதாகிருஷ்ணன்

**இ) சிறுவினாக்கள்:**

1. மூடத்தனம் எது? மூலதனம் எது?
   வெறுங்கை என்று நினைப்பது மூடத்தனம் ஆகும். நமது பத்து விரல்களும் மூலதனம் ஆகும்.

2. எல்லை என தாராபாரதி குறிப்பிடுவது எதனை?
   எல்லை என தாராபாரதி குறிப்பிடுவது தொடுவானம் ஆகும்.

3. எந்த சிலந்தி வலைக்குள் தூங்கக் கூடாது?
   விரக்தி என்னும் சிலந்தி வலைக்குள் தூங்கக் கூடாது.

4. தாராபாரதியின் சிறப்புப்பெயர் என்ன?
   தாராபதியின் சிறப்புப் பெயர் கவிஞாயிறு.

5. தாராபாரதியின் படைப்புகள் சிலவற்றை எழுதுக.
   புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, இன்னொரு சிகரம், தாராபாரதி கவிதைகள் முதலியன தாராபாரதியின் படைப்புகள் ஆகும்.

ஈ) **பெருவினாக்கள்:**

1. "வேலைகளல்ல, வேள்விகளே" எனும் பாடலின் கருத்துகளை எழுதுக.

வெறுங்கை என்று நினைக்கும் மூடத்தனத்தை நம்மை விட்டு ஒதுக்க வேண்டும். நமது கைகளில் உள்ள பத்து விரல்களை மூலதனமாக கொண்டு உழைத்தால் கருங்கல் பாறையும் உடைந்து விழும். இந்த உலகமே நமது கைகளில் சுழன்று வரும். நம்முடைய தோள்களை தொழிற்சாலையாக கொண்டு உழைத்தால் நாம் தொடும் இடமெல்லாம் மலர் சோலையாக மாறும். தொடுவானத்தை எல்லையாக கொண்டால் நமக்கு தோல்விகள் என்பதே இல்லை. வேங்கைப் புலியான நாம் விரக்தி என்னும் சிலந்தி வலைக்குள் தூங்கிக் கொண்டிருக்க கூடாது. இருளை நீக்கும் வெளிச்சமான நாம் கிழக்கு எங்கே உள்ளது என தேடிக் கொண்டிருக்க கூடாது. வாழ்க்கை வெறும் பாலைவனம் என்று புலம்பிக்கொண்டு மூலையில் முடங்கி இருக்காமல், வானத்தை நோக்கி நமது வலிமையை காட்ட வேண்டும். வானிலும் மண்ணிலும் நிகழும் அனைத்து மாற்றங்களும் நமது வேலைகள் அல்ல; நாம் செய்யும் வேள்விகள் என்பதை அனைவரும் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்பட வேண்டும் என தாராபாரதி கூறுகிறார்.

2. கவிஞர் தாராபாரதி – குறிப்பு வரைக.

கவிஞர் தாராபாரதி திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள குவளை என்னும் சிற்றூரில் 1947 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் நாள் பிறந்தார். இவரது பெற்றோர் துரைசாமி – புஷ்பம் அம்மாள் ஆவர். தாராபாரதியின் இயற்பெயர் ராதாகிருஷ்ணன். இவர் எழுச்சிமிக்க கவிதைகள் எழுதுவதில் வல்லவர். தாராபாரதி 34 ஆண்டுகள் ஆசிரியராக பணியாற்றினார். தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்றவர். இவருக்கு கவிஞாயிறு என்ற சிறப்புப் பெயரும் உண்டு. புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, இன்னொரு சிகரம், தாராபதி கவிதைகள் என்பன இவரது படைப்புகளாகும். இவர் 2000 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

## 18. ஆசிரியர் தினம்

**பக்கம் 70**

அ) **பொருத்துக.**

1. செப்டம்பர் 5
2. அக்டோபர் 5
3. நவம்பர் 20
4. செப்டம்பர் 10
5. ஜனவரி 16

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. இந்தியாவில் ஆசிரியர் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது? ஏன்?
   இந்தியாவில் செப்டம்பர் 5 ஆம் நாள் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. நமது நாட்டின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாகவும், மாணவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கும் ஆசிரியர்களுக்கு நன்றி செலுத்தும் விதமாகவும் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது.

2. "உலக ஆசிரியர் தினம்" கொண்டாடப்படும் நாள் எது? அதற்கான அறிவிப்பை வெளியிட்டது யார்?
   ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 5 ஆம் நாள் உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. இதற்கான அறிவிப்பை யுனெஸ்கோ அமைப்பு 1994 ஆம் ஆண்டு வெளியிட்டது.

3. பூட்டானில் நவீன படிப்பை ஆரம்பித்து வைத்தவர் யார்?
   பூட்டானில் நவீன படிப்பை ஆரம்பித்து வைத்தவர் அந்நாட்டின் மூன்றாவது அரசர் ஜிக்மே டோஜோர் வாங்சக் என்பவர் ஆவார்.

4. சீனாவில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படும் முறையை எழுதுக.
   சீனாவில் செப்டம்பர் 10 ஆம் நாள் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் மாணவர்கள் தங்களின் ஆசிரியர்களுக்கு பரிசுகளையும், பூச்செண்டுகளையும் கொடுத்து நன்றிகளை தெரிவிப்பார்கள்.

5. ஆசிரியர் தினத்தை "அரிகுரு" என்ற பெயரில் கொண்டாடும் நாடு எது? ஏன்?
   ஆசிரியர் தினத்தை அரிகுரு என்ற பெயரில் கொண்டாடும் நாடு புருனே. புருனேயின் 28வது ஆட்சியாளரான உமர் அலி என்பவரின் பிறந்தநாளான செப்டம்பர் 23 ஆம் நாள் ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது.

## 19. சார்பெழுத்துகள்

**பக்கங்கள் 73-74**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. அ) 30 | 2. ஆ) 10 | 3. இ) 216 |
| 4. அ) 126 | 5. இ) ஆய்தம் | |

**ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளைச் சேர்த்து சொற்களை உருவாக்குக.**

1. மேம்பாடு 2. வேடம் 3. விளையாட்டு
4. புத்தகம் 5. தென்றல்

**இ) கொடுக்கப்பட்டுள்ள சொற்களை எடுத்துக்காட்டில் உள்ளது போல் பிரித்து எழுதுக.**

1. ச் +அ / ங் / க் + ஒ/ ல் + இ 2. வ் + ஆ / ய் / ம் + ஐ
3. ப் + ஒ / ன் / ம் + அ / ல் +அ / ர் 4. ந் + ஆ / ற் / க் + ஆ / ல் + இ
5. ச் + எ / வ் / வ் + ஆ / ழ் + ஐ

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. தமிழ் எழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
தமிழ் எழுத்துகள் இருவகைப்படும். அவை முதலெழுத்துகள் மற்றும் சார்பெழுத்துகள் ஆகும்.

2. முதலெழுத்துகள் யாவை?
உயிரெழுத்துகள் பன்னிரண்டும், மெய்யெழுத்துகள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துகள் முதலெழுத்துகள் ஆகும்.

3. சார்பெழுத்துகள் என்றால் என்ன?
முதலெழுத்துகளைச் சார்ந்தும், முதலெழுத்துகளின் திரிபு, விகாரத்தால் பிறக்கும் எழுத்துகள் சார்பெழுத்துகள் எனப்படும்.

4. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
சார்பெழுத்துகள் பத்து வகைப்படும். அவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம்.

5. உயிர்மெய் எழுத்துகள் எவ்வாறு தோன்றுகின்றன?
ஓர் உயிரெழுத்தும், ஒரு மெய்யெழுத்தும் இணைவதால் தோன்றுவது உயிர்மெய் எழுத்தாகும்.

6. உயிர்மெய் எழுத்தின் வகைகளை விளக்குக.
உயிர்மெய் எழுத்துகள் இரண்டு வகைப்படும்.
   - உயிர்மெய் குறில் : மெய்யெழுத்துகளோடு உயிர் குறில் எழுத்துகள் இணைந்து தோன்றுவது உயிர்மெய் குறில் ஆகும். தமிழில் மொத்தம் 90 உயிர்மெய் குறில் எழுத்துகள் உள்ளன.
   - உயிர்மெய் நெடில் : மெய்யெழுத்துகளோடு உயிர் நெடில் எழுத்துகள் இணைந்து தோன்றுவது உயிர்மெய் நெடில் ஆகும். தமிழில் மொத்தம் 216 உயிர்மெய் நெடில் எழுத்துகள் உள்ளன.

7. ஆய்தம் என்றால் என்ன?
மூன்று புள்ளிகளையுடைய (ஃ) எழுத்து ஆய்த எழுத்து அல்லது ஆய்தம் என்றழைக்கப்படுகிறது. இது தனித்து வரும் இயல்பு அற்றது.

8. ஆய்த எழுத்திற்குரிய வேறு பெயர்களை எழுதுக.
முப்பாற்புள்ளி, முப்புள்ளி, அஃகேனம், தனிநிலை, ஒற்று என்பன ஆய்த எழுத்திற்கு உள்ள வேறு பெயர்கள் ஆகும்.

## 20. பூமியைப் பாதுகாப்போம்!

**பக்கங்கள் 77-78**

**அ) வாக்கியத்தில் அமைக்க.**

1. தாத்தா தனது <u>சந்ததியினர்</u> பயன்படுத்துவதற்காக செல்வத்தை சேர்த்தார்.
2. ரவியின் <u>இயந்திரம்</u> பழுதானது.
3. ஆராய்ச்சியாளர்கள் <u>புதைபொருள் ஆராய்ச்சி</u> செய்தனர்.
4. குழந்தைகள் கண்காட்சியை <u>விசித்திரமாக</u> கண்டனர்.
5. கடலில் <u>நெகிழி</u> பொருட்களை போடாதீர்கள்.

**ஆ) பிரித்து எழுதுக.**

1 பொறுப்பு + அற்ற
2. மண் + பாண்டங்கள்
3. தோற்றம் + அளித்தனர்
4. முள் + புதர்கள்
5. பழமை + காலம்

**இ) சிறுவினாக்கள்:**

1. ரவியின் பொழுதுபோக்கு என்ன?
ரவியின் பொழுதுபோக்கு வினோதமான பொருட்களைச் சேகரிப்பதாகும்.

2. மாவரைக்கும் இயந்திரம் போல இருந்த கருவியைப் பற்றி விவரிக்க.
மாவரைக்கும் இயந்திரம் பெரிய அளவில் இருந்த கருவியில் இருவர் அமரும் வகையில் இரண்டு இருக்கைகள் பொருத்தப்பட்டிருந்தன. அந்த இருக்கைகளுக்கு முன்னால் சுழலும் வகையில் ஒரு வளையமும், அதற்கு மேலே ஒரு மூடியும் அமைந்திருந்தன.

3. ரவியையும், கபீரையும் இயந்திரம் எந்தக் காலத்திற்கு அழைத்துச் சென்றது?
ரவியையும், கபீரையும் இயந்திரம் எதிர்காலமாகிய 2220 ஆம் ஆண்டிற்கு அழைத்துச் சென்றது.

4. 2220 ஆம் ஆண்டில் இருந்த மனிதர்களின் தோற்றத்தை விளக்குக.
2220 ஆம் ஆண்டில் இருந்த மனிதர்கள் விசித்திரமான

தோற்றம் கொண்டவர்களாகவும், வயதானவர்களை போலவும் காட்சியளித்தனர். அவர்களின் உடல் பெருத்தும், கை, கால்கள் மெலிந்தும் இருந்தன.

5. 2220 ஆம் ஆண்டில் இருந்த விலங்குகளின் தோற்றம் பற்றி எழுதுக.
   2220 ஆம் ஆண்டில் சிறிய விலங்குகள் அனைத்தும் பெரியதாகவும், பெரிய விலங்குகள் அனைத்தும் சிறியதாகவும் உருமாறி இருந்தன.

**ஈ) பெருவினா:**

1. 2220 ஆம் ஆண்டில் மனிதர்களின் உருமாற்றத்திற்கான காரணம் என்ன?
   இரசாயன உரங்களை பயன்படுத்தி விளைவிக்கப்பட்ட உணவுப் பொருட்கள், அதிநவீன அறிவியல் கண்டுபிடிப்புகளில் இருந்து வெளியேறும் வாயுக்கள், கழிவுப் பொருட்கள், குப்பைக் கூழங்களால் உண்டான சூழ்நிலை மாற்றங்கள், நெகிழிப் பொருட்களின் பயன்பாட்டினால் ஏற்பட்ட தீமைகள் போன்றவையே 2220 ஆம் ஆண்டில் வாழ்ந்த மனிதர்களின் உருமாற்றத்திற்கு காரணம் ஆகும்.

## 21. தாலாட்டு

**பக்கம் 81**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. பேசாது
2. இருள்
3. துன்பம்
4. தூங்காதே

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. அ. மருதகாசி – குறிப்பு வரைக.
   அ. மருதகாசி திருச்சி மாவட்டத்திலுள்ள மேலக்குடிகாடு என்னும் ஊரில் 1920 ஆம் ஆண்டு பிப்ரவரி 13 ஆம் நாள் பிறந்தார். இவரது பெற்றோர் அய்யம்பெருமாள் – மிளகாயி அம்மாள். இவரின் சிறப்புப் பெயர் திரைக்கவித் திலகம் என்பதாகும். மருதகாசி அவர்கள் 1989 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் நாள் இவ்வுலகைவிட்டு மறைந்தார்.

2. “தாலாட்டு” பாடலில் கவிஞர் குழந்தையை எவ்வாறு வர்ணித்துள்ளார்?
   தாலாட்டு பாடலில் கவிஞர் மருதகாசி அவர்கள் குழந்தையை ஆசைக் கிளி, அழகான சிலை, வாசமிக்க மலர், பேசுகின்ற பிறை, நமது வாழ்கைக்கு தேவையான நிதி, மாசற்ற ஒளியை வீசுகின்ற வைர மணி, இன்பம் தருகின்ற வசந்த கால தென்றல் என

வர்ணித்துள்ளார். மேலும், நம்மை சுற்றி இருக்கும் சூழலும், இனிமையான இசையை அளிக்கும் யாழும் மழலை செல்வமாகிய குழந்தை தரும் இன்பத்திற்கு ஈடாகாது எனவும், கோடி கோடியாக செல்வங்களை கொட்டி கொடுத்தாலும் ஒரு குழந்தை செல்வத்திற்கு ஈடாகாது எனவும் குழந்தையை “தாலாட்டு” பாடலின் வழியாக மருதகாசி வர்ணித்துள்ளார்.

## 22. திருக்குறள்

**பக்கம் 84**

**அ) பிரித்து எழுதுக.**

1. முகன் + அமர்ந்து
2. பணிவு + உடையன்
3. அணி + அல்ல
4. இனிது + ஈன்றல்
5. கவர்ந்து + அற்று

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. வன்சொல் 2. இன்பம் 3. வளர 4. காய் 5. மறுமை

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. எவருக்கு வறுமை வராது?

   அனைவரிடமும் இன்பம் தரும் சொற்களைப் பேசுபவர்க்கு துன்பம் தரும் வறுமை என்றும் வராது.

2. ஒருவனுக்குரிய சிறந்த அணிகலன் எது?

   அடக்கமான பண்பும், இனிமையாக பேசும் இயல்புமே ஒருவனுக்குரிய சிறந்த அணிகலன் ஆகும்.

3. அறம் வளர்க்கும் வழி யாது?

   பிறர்க்கு நன்மை தருபவனவற்றை நாடி, இனிய சொற்களை பேசினால், பாவங்கள் குறைந்து அறம் பெருகும். அதுவே அறம் வளர்க்கும் வழியாகும்.

4. இம்மையிலும் மறுமையிலும் இன்பம் தருவது எது?

   மற்றவர்க்கு மனத்துன்பம் தராத இனிய சொல் ஒருவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் இன்பம் தரும்.

5. “இனிய உளவாக” எனத் தொடங்கும் குறளின் பொருளை எழுதுக.

   மனதிற்கு இன்பம் தரும் இனிய சொற்கள் இருக்கும் போது, அவற்றை விட்டுக் கடுமையான சொற்களைக் கூறுதல் என்பது இனிமையான கனிகள் இருக்கும்போது அவற்றை விட்டுக் காய்களை உண்ணுவது போன்றதாகும்.

## 23. தஞ்சை பிரகதீசுவரர் ஆலயம்

**பக்கம் 88**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அ) ஆலயம் 2. ஆ) நடனம் 3. இ) சித்திரம்

4. இ) கரி

**ஆ) சிறுவினாக்கள்:**

1. "களப்பயணம் செல்கிறோம்" என்று அறிவித்தவர் யார்?
களப்பயணம் செல்கிறோம் என மாணவர்களிடம் அறிவித்தவர் தமிழாசிரியர்.

2. பச்சைப்பசேல் என தலையசைத்தவை எவை?
பச்சைப்பசேல் என தலையசைத்தவை நெற்கதிர்கள்.

3. மாணவர்கள் எங்கு களப்பயணம் செய்தனர்?
மாணவர்கள் தஞ்சையிலுள்ள பிரகதீசுவரர் ஆலயத்திற்கு களப்பயணம் சென்றனர்.

**இ) பெருவினாக்கள்:**

1. இராசராசன் வாயிலின் சிறப்பு யாது?
இராசராசன் திருவாயில் மூன்று நிலைகளை உடைய கருங்கல் கோபுரம் ஆகும். இந்நுழைவாயிலின் இருபுறமும் எழில்மிகு துவாரபாலகர் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றுள், இடப்புறம் உள்ள சிற்பம் "கற்பனையின் சிகரம்" என்றழைக்கப்படுகிறது.

2. கோவிலின் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ள உருவங்கள் யாவை?
பெரிய பாம்பு, யானை, விலங்குகள், இராசராசன் சிற்பம், நடன நங்கைகளின் சிற்பங்கள், துவாரபாலகர் சிற்பங்கள், தெய்வச் சிற்பங்கள் ஆகியன கோவிலின் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ள உருவங்கள் ஆகும்.

3. தஞ்சைக் கோவிலிலுள்ள நந்தி சிலை பற்றி எழுதுக.
கோவிலின் முன் மண்டபத்தில் உள்ள ஒரே கல்லாலான நந்தி சிலை உள்ளது. நுண்ணிய வேலைப்பாடுகளோடு கம்பீரமாக அமர்ந்த நிலையில் இருக்கும்.

4. கோவிலின் திருவிமானம் பற்றி விவரிக்க.
அனைவரையும் அண்ணாந்து பார்க்க வைக்கும் வானளாவிய கோபுரம் தான் திருவிமானம் ஆகும். திருவிமானத்தின் உச்சி மிகப்பெரிய உருண்டை வடிவக் கல்லைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அந்தக்கல் 81 டன் எடை கொண்டது. அந்த திருவிமானத்தின் கீழே இறைவன் இருக்கும் கருவறை உள்ளது.

5. தஞ்சையில் பிரசித்தி பெற்ற பொருட்கள் என்னென்ன?
   தஞ்சைக்கு பிரசித்தி பெற்ற பொருட்கள் தஞ்சாவூர் தட்டுகள் மற்றும் தலையாட்டி பொம்மைகள் ஆகியனவாகும்.

## 24. ஆகுபெயர்

**பக்கங்கள் 91-92**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆ) பதினாறு
2. அ) காலவாகு பெயர்
3. ஆ) தொழிலாகு பெயர்
4. அ) பண்பாகு பெயர்
5. இ) இடவாகு பெயர்

**ஆ) பொருத்துக.**

1. பொருளாகு பெயர்
2. இடவாகு பெயர்
3. காலவாகு பெயர்
4. சினையாகு பெயர்
5. பண்பாகு பெயர்
6. தொழிலாகு பெயர்

**இ) கீழ்க்கண்ட சொற்றொடர்களின் ஆகுபெயர் வகைகளை எழுதுக.**

1. பொருளாகு பெயர்
2. இடவாகு பெயர்
3. தொழிலாகு பெயர்
4. இடவாகு பெயர்
5. பொருளாகு பெயர்
6. சினையாகு பெயர்
7. காலவாகு பெயர்
8. பண்பாகு பெயர்
9. பண்பாகு பெயர்
10. பொருளாகு பெயர்

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. ஆகுபெயர் என்றால் என்ன?
   ஒன்றன் பெயர் அதனோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்கு தொன்றுதொட்டுப் பெயராகி வருவது ஆகுபெயர் ஆகும்.

2. ஆகுபெயர் எத்தனை வகைப்படும்?
   ஆகுபெயர் பதினாறு வகைப்படும்.

3. ஆகுபெயரின் முக்கியமான ஆறு வகைகள் யாவை?
   பொருளாகு பெயர், இடவாகு பெயர், காலவாகு பெயர், பண்பாகு பெயர், சினையாகு பெயர், தொழிலாகு பெயர் என்பன ஆகுபெயரின் முக்கியமான ஆறு வகைகள் ஆகும்.

4. பொருளாகு பெயரைச் சான்றுடன் விவரி.
   முதற்பொருளின் பெயரானது அதன் சினைப் பொருளுக்கு ஆகி வருவது பொருளாகு பெயர் எனப்படும்.
   எ.கா. முல்லை மணம் வீசியது.
   இதில் “முல்லை” என்பது முல்லைக் கொடியைக் குறிக்கும். இங்கே “மணம் வீசியது” என்னும் குறிப்பால், சினைப் பொருளாகிய முல்லைப் பூவுக்கு ஆகி வந்துள்ளது.

5. பொருளாகு பெயரின் மற்றொரு பெயர் யாது?
பொருளாகு பெயரின் மற்றொரு பெயர் முதலாகு பெயர்.

6. இடவாகு பெயர் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
ஓர் இடத்தின் பெயரானது அந்த இடத்தில் உள்ள பொருளுக்கு ஆகி வருவது இடவாகு பெயர் எனப்படும்.
எ.கா. திருச்சி வென்றது.
இதில் "திருச்சி" என்னும் இடப்பெயரானது, "வென்றது" என்னும் குறிப்பால் அந்த ஊரில் உள்ள மக்களுக்கு ஆகி வந்துள்ளது.

7. காலவாகு பெயரைச் சான்றுடன் விவரி.
ஒரு காலத்தின் பெயரானது அந்த காலத்தோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது காலவாகு பெயர் எனப்படும்.
எ.கா. கார் அறுவடை ஆயிற்று.
இதில் "கார்" என்ற காலப்பெயரானது, "அறுவடை ஆயிற்று" என்னும் குறிப்பால், கார்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்துள்ளது.

8. சினையாகு பெயரை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
ஒரு சினைப் பொருளின் பெயரானது அதன் முதற்பொருளுக்கு ஆகி வருவது சினையாகு பெயர் எனப்படும்.
எ.கா. தலைக்கு ஒரு பழம் கொடு.
இதில் "தலை" என்னும் சினைப் பொருளின் பெயரானது, "ஒரு பழம் கொடு" என்னும் குறிப்பால் அந்தத் தலையை உடைய மனிதனுக்கு ஆகி வந்துள்ளது.

9. பண்பாகு பெயர் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
ஒரு பண்பின் பெயரானது அப்பண்புடைய பொருளுக்கு ஆகி வருவது பண்பாகு பெயர் எனப்படும். இதை குணவாகு பெயர் என்றும் அழைப்பர்.
எ.கா. வீட்டிற்கு வெள்ளை அடித்தான்.
இதில் "வெள்ளை" என்னும் நிறத்தின் பெயர், அந்நிறத்தின் சுண்ணாம்புக்கு ஆகி வந்துள்ளது.

10. தொழிலாகு பெயரைச் சரியான உதாரணத்துடன் விளக்குக.
ஒரு தொழிலின் பெயரானது அத்தொழிலால் அமைந்த பொருளுக்கு ஆகி வருவது தொழிலாகு பெயர் எனப்படும்.
எ.கா. வற்றல் உண்டான்.
இதில் "வற்றல்" என்னும் தொழிற்பெயரானது, அத்தொழிலால் அமைந்த பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

## 25. பொறுத்தார் பூமியாள்வார்

### பக்கம் 95

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. சிற்பி யாருடைய சிலையைச் செதுக்க எண்ணினார்?
   சிற்பி கடவுளின் சிலையைச் செதுக்க எண்ணினார்.

2. சிற்பி சிலையைச் செதுக்க எதைத் தேடினார்?
   சிற்பி சிலையைச் செதுக்குவதற்கு தகுந்த ஒரு கல்லைத் தேடினார்.

3. சிற்பியிடம் பேசியது யார்?
   சிற்பியிடம் பேசியது ஒரு பெரிய கல் ஆகும்.

4. "பொறுத்தார் பூமியாள்வார்" என்ற கதையின் நீதி என்ன?
   வெற்றி என்பது சாதாரணமாக அனைவருக்கும் கிடைத்து விடாது. பல வலிகளையும், பல தடைகளையும் தாண்டி கடுமையாக உழைப்பதுடன் மிகவும் பொறுமையாக இருந்தால் மட்டுமே வெற்றி என்னும் கனியைத் தட்டிப் பறிக்க முடியும்.

5. வெற்றிக்குத் தேவையானவை எவை?
   விடாமுயற்சி, கடின உழைப்பு, பொறுமை ஆகிய மூன்றும் வெற்றிக்குத் தேவையானவை ஆகும்.

## 26. அறநெறிச்சாரம்

### பக்கம் 98

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆ) குற்றமின்றி 2. அ) நான்கு 3. இ) மிக்கார்
4. ஆ) 226 5. அ) வெண்பா

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. ஒழுக்கத்தால் உயர்ந்தோரின் கடனாக அறநெறிச்சாரம் குறிப்பிடுவதை எழுதுக.
   அறநெறிகள் கூறுபவனையும், அந்த நெறிகளை கேட்பவனையும், உரைக்கப்படும் அறத்தினையும் அந்நெறிகளை கூறுவதால் உண்டாகும் பயனையும் குற்றம் இல்லாமல் ஆராய்ந்து, அந்நான்கினுள் குற்றமானவற்றை நீக்கிவிட்டு, நல்லனவற்றை நிலைபெறச் செய்தலே ஒழுக்கத்தால் உயர்ந்தோரின் கடனாகும்.

2. "அறநெறிச்சாரம்" – நூல் குறிப்பு வரைக.
   அறநெறிச்சாரம் என்னும் நூலை எழுதியவர் அருக சமயத்தைச்

சேர்ந்த முனைப்பாடியார் ஆவார். இந்நூல் மொத்தம் 226 பாடல்களை உடையது. இப்பாடல்கள் அனைத்தும் வெண்பா வடிவில் உள்ளன. அறத்தின் வழியைப் பிழிந்து சாரமாகத் தருவதனாலேயே இந்நூல் ‘‘அறநெறிச்சாரம்’’ எனப் பெயர் பெற்றது. அறநெறிக் கருத்துகளையும் ஒழுக்கத்தையும் சிறப்பாக எடுத்துரைக்கும் நீதி நூலாகவும் இந்நூல் விளங்குகிறது.

## 27. ஆசாரக்கோவை

**பக்கம் 100**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. நல்லொழுக்கம் உடையவர் எவற்றைச் சொல்ல மாட்டார் என ஆசாரக்கோவை கூறுகிறது?
   நல்லொழுக்கம் உடையவர், வஞ்சனை சொல்லையும், பயனில்லாத சொல்லையும், பழிச்சொல்லையும், புறங்கூறுதலையும் சொல்ல மாட்டார்.

2. ‘‘பெரியோர்க்குச் செய்யும் ஒழுக்கம்’’ என பெருவாயில் முள்ளியார் கூறுவன யாவை?
   பெரியோர்க்குச் செய்யும் ஒழுக்கம் காலில் தொழுதலும், நிற்றலும், அவரைக் கண்டவுடன் எழுந்திருத்தலும் ஆகும்.

3. ‘‘கற்றவர் கண்ட நெறி’’ என ஆசாரக்கோவை கூறுவது என்ன?
   துறவிகளைப் போற்றுதலும், பழிக்கு அஞ்சுதலும், பெரியோர் முன் தான் கற்றவற்றைச் சொல்லாது இருத்தலும் ‘‘கற்றவர் கண்ட நெறி’’ என ஆசாரக்கோவை கூறுகிறது.

4. ஆசாரக்கோவை – நூல் குறிப்பு வரைக.
   ஆசாரக்கோவை என்னும் நூலை இயற்றியவர் பெருவாயில் முள்ளியார். ‘‘ஆசாரம்’’ என்பதன் பொருள் ஒழுக்கம் ஆகும். நமது அன்றாட வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகள் பற்றியும், நாம் நாள்தோறும் செய்ய வேண்டிய கடமைகள் பற்றியும் எடுத்துரைப்பதே ஆசாரக்கோவை ஆகும். இந்நூல் பல்வேறு வெண்பா வகையில் அமைந்த 100 பாடல்களால் ஆனது.

## 28. உழந்தும் உழவே தலை

**பக்கங்கள் 105-106**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆ) உலகம் 2. அ) விவசாயம் 3. அ) பயிரிடுதல்
4. ஆ) கமம் 5. அ) நிலம்

**ஆ) பொருத்துக.**

1. விவசாயம்　　2. உலகின் அச்சாணி　　3. இயற்கை உரம்
4. கொத்தமல்லி　　5. கிராம்பு

**இ) சிறுவினாக்கள்:**

1. நம் நாட்டில் அதிக அளவில் பயிரிடப்படும் பயிர் வகை எது?

   நம் நாட்டில் அதிக அளவில் பயிரிடப்படும் பயிர் வகை நெல் ஆகும்.

2. "உழவு" என்பதன் பொருள் என்ன?

   உழவு என்பதற்கு வேளாண்மை, விவசாயம் மற்றும் கமம் என்பது பொருளாகும். உழவு என்பது உணவு மற்றும் பிற பயன்பாடுகளுக்காக பலப் பயிர்களை உற்பத்தி செய்தல், பராமரித்தல் மற்றும் அறுவடை செய்து உலகில் உள்ள மக்களிற்கு உணவு அளிப்பதைக் குறிக்கிறது. இந்த உலகிற்கு உணவு எனும் ஓர் ஒப்பில்லாத கொடையைத் தருவதே உழவு ஆகும்.

3. இயற்கை விவசாய முறையில் பயிர்களை எவ்வாறு தேர்வு செய்ய வேண்டும்?

   இயற்கை விவசாயத்தில் முதலில் பயிர் செய்வதற்கேற்ற நிலத்தைத் தேர்வு செய்ய வேண்டும். பின்னர் அந்த நிலத்தின் தன்மைக்கேற்ப பயிர்களை தேர்வு செய்தல் வேண்டும். பருவநிலை மாற்றம் பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

4. இயற்கை விவசாயத்திற்கேற்ற பயிர் வகைகளில் ஏதேனும் எட்டின் பெயர்களைக் குறிப்பிடுக.

   நெல், கோதுமை, சோளம், கம்பு, பருப்பு வகைகள், கடலை, எள், பருத்தி போன்றவை இயற்கை விவசாயத்திற்கு ஏற்ற பயிர் வகைகள் ஆகும்.

5. செயற்கை உரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் என்ன?

   செயற்கை உரங்களை பயன்படுத்துவதனால் நிலத்தின் தன்மை கெடுகிறது. மேலும் அந்நிலத்தில் விளையும் பயிர்கள் நச்சுத்தன்மை கொண்டதாக இருக்கும். அத்தகைய பயிர்களில் இருந்து கிடைக்கும் உணவுகளை நாம் உண்டால் நமக்கு பல விதமான நோய்கள் ஏற்படும்.

**ஈ) பெருவினாக்கள்:**

1. உழவுத் தொழிலின் சிறப்பை வள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார் என்பதை எழுதுக.

   உழவுத் தொழிலின் சிறப்பை வள்ளுவர்,

உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

என்னும் குறள் மூலம் எடுத்துரைக்கிறார். உலகத்தார் எனும் தேருக்கு அச்சாணியாக இருப்பவர்கள் உழவர்களே ஆவர். உழவர்களே இந்த உலகத்தில் உழவுத் தொழில் செய்யாதோரையும் தாங்குகிறார்கள். ஆகையால் அவர்களே இந்த உலகத்தையே தாங்கி நிற்கும் அச்சாணி ஆவர் என்று உழவுத் தொழிலின் பெருமைகளை எடுத்துரைக்கிறார் வள்ளுவர்.

2. இயற்கை விவசாயத்தின் நன்மைகளைக் குறிப்பிடுக.

நமது முன்னோர்கள் நம் மண்வளம், இயற்கை வளம் போன்றவற்றைப் பேணிக்காப்பதற்காக இயற்கை விவசாயத்தை மேற்கொண்டனர். நமது நாட்டின் மிகத் தொன்மையான ஒரு விவசாய முறை இயற்கை விவசாயம் ஆகும். இது பயிர் மற்றும் கால்நடை வளர்ப்பில் ஒரு பகுதியாகும். செயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், மரபணு மாற்றப்பட்ட உயிரினங்கள், ஆண்டிபயாடிக்குகள் மற்றும் வளர்ச்சி ஹார்மோன்களைப் பயன்படுத்தி செய்யப்படும் இன்றைய செயற்கை விவசாயத்தை விட மிகவும் சிறந்தது நம் இயற்கை விவசாயமாகும். இயற்கை உரங்களைப் பயன்படுத்தி விளைவிக்கும் பயிர்களில் ஊட்டச்சத்துகள் மிகுந்து காணப்படுகின்றன.

3. இயற்கை விவசாய முறை – குறிப்பு வரைக.

- பயிர் தேர்வு: முதலில் பயிர் இடுவதற்கு தகுந்த நிலத்தை தேர்வு செய்ய வேண்டும். பின்னர் அந்த நிலத்தின் தன்மைக்கேற்ப பயிரையும் தேர்வு செய்தல் மிக முக்கியம்.
- மண்வளம்: நிலத்தின் தரம், தன்மை, குணம் போன்றவற்றை தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.
- உரங்கள்: கால்நடை சாணம், இலை சருகுகள், மட்கும் குப்பைகள், மண்புழு உரங்கள் சரியான முறையில் சேகரித்து பயன்படுத்த வேண்டும். இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதால் விளைவிக்கப்படும் பொருட்கள் மிகவும் தரமானதாகவும், சத்துமிக்கதாகவும் இருக்கும்.
- பயிர் ஆரோக்கியம்: பயிர்களுக்குத் தேவையான சுமார் 80 முதல் 90 விழுக்காடு சத்துகள் மண்ணில் இருந்து கிடைக்கின்றன. இயற்கை உரங்களை நேரடியாவோ, தண்ணீரில் கலந்தோ பயன்படுத்தலாம்.
- களை நீக்கம்: பயிர்களுக்கு இடையில் இருக்கும் தேவையில்லா களைகளை கண்டறிந்து உடனடியாக நீக்க வேண்டும்.

களைகளை நீக்குவதன் மூலம் பயிர்களுக்கு எவ்வித குறைபாடுகள் மற்றும் தொற்றுகள் ஏற்படாமல் தவிர்க்கலாம்.

- அறுவடை: பயிர்களை தக்க பருவத்தில் அறுவடை செய்தல் வேண்டும். அதே பயிரை மீண்டும் பயிரிடாமல் சூழலுக்கேற்றவாறு மாற்றுப் பயிரை பயிரிடுதல் மிகவும் சிறந்தது.

4. மண்ணின் வகைகளையும், அவற்றிற்கேற்ற பயிர் வகைகளையும் எழுதுக.
   - வண்டல் மண்: பருத்தி, சோளம், கரும்பு, நெல், மிளகாய், கோதுமை, கேழ்வரகு, வாழை, மஞ்சள், பழ மரங்கள்
   - கரிசல் மண்: பருத்தி, கடலை, கோதுமை, தினை, கரும்பு
   - செம்மண்: பருத்தி, சோளம், கடலை, அவரை, கம்பு, பழ மரங்கள்
   - கந்தகமண்: சோளம், கேழ்வரகு, பருத்தி, தினை, கரும்பு, ஆமணக்கு, அவரை, கிராம்பு, மிளகு, ஏலக்காய்
   - கருமணல் மண்: கரும்பு, சாமை, முருங்கை, தட்டைப்பயிறு
   - சாம்பல்நிற மண்: வெங்காயம், புகையிலை, வாழை, பருத்தி, கடலை

## 29. மயங்கொலிச் சொற்கள்

### பக்கங்கள் 109-111

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இ) கலை  2. அ) விலங்கு  3. ஆ) ஆனி
4. ஆ) அலகு  5. இ) உழவுத்

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பல்லி; பள்ளி  2. மலை; மழை  3. கறை; கரை
4. வாள்; வால்  5. ஒலி; ஒளி

**இ) பொருத்துக.**

1. தவிர்  2. வெளிச்சம்  3. உணவு
4. அரசன்  5. ஆடவன்  6. பசு

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. மயங்கொலிச் சொற்கள் என்றால் என்ன?
   தமிழ் மொழியில் ஒரே வடிவிலான எழுத்துருவும், வேறுபட்ட பொருளும் கொண்டுள்ள சொற்கள் மயங்கொலிச் சொற்கள் எனப்படும்.

2. தமிழில் மொத்தம் எத்தனை மயங்கொலி எழுத்துகள் உள்ளன?
   தமிழில் மொத்தம் எட்டு மயங்கொலி எழுத்துகள் உள்ளன.

3. மயங்கொலி எழுத்துகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

- ல, ழ, ள பொருள் வேறுபாடு: அலகு – பறவையின் மூக்கு
  அழகு – வனப்பு
  அளகு – சேவல், பெண் கூகை
- ர, ற பொருள் வேறுபாடு : இரை – ஒலி, உணவு
  இறை – கடவுள், அரசன்
- ண, ன பொருள் வேறுபாடு : அணு – நுண்மை
  அனு – தாடை
- ந, ன பொருள் வேறுபாடு : அந்நாள் – அந்த நாள்
  அன்னாள் – அப்பெண்

4. ர, ற வேறுபாட்டை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

எ.கா. அரம் – ஒரு கருவி
அறம் – தர்மம், நீதி, கடமை

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் "அரம்" என்பது இரும்பைக் கூர்மையாக்க பயன்படும் கருவியை குறிக்கிறது. "அறம்" என்பது தர்மம், வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய நீதி, ஒருவரின் கடமைகள் முதலியவற்றை குறிக்கிறது.

5. ல, ழ, ள பொருள் வேறுபாட்டை எழுதுக.

எ.கா. ஒலி – சப்தம், நாதம்
ஒழி – அழி, தவிர், துற
ஒளி – வெளிச்சம், மறை

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் "ஒலி" என்பது ஒலிக்கும் சப்தத்தை குறிக்கிறது. "ஒழி" என்பது அழித்தல், தவிர்த்தல், துறத்தல் போன்றவற்றை குறிக்கிறது. "ஒளி" என்பது இருளை நீக்கும் வெளிச்சம், மறைத்து வைத்தல் முதலியவற்றை குறிக்கிறது.

6. ண, ன / ந, ன பொருள் வேறுபாட்டைச் சான்றுடன் விளக்குக.

ண, ன வேறுபாடு:

எ.கா. ஆணி – எழுத்தாணி, இரும்பாணி
ஆனி – தமிழ் மாதங்களுள் ஒன்று

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் "ஆணி" என்பது எழுத பயன்படும் எழுத்தாணி, சுவற்றில் அடிக்கப் பயன்படும் இரும்பு ஆணியை குறிக்கிறது. "ஆனி" என்பது தமிழ் மாதங்களில் ஒன்றை குறிக்கிறது.

ந, ன வேறுபாடு:

எ.கா. தேநீர் – ஒரு பானம்
தேனீர் – தேன் கலந்த நீர்

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் “தேநீர்” என்பது தேயிலை கலக்கப்பட்ட ஒரு சூடான பானத்தின் பெயரை குறிக்கிறது. “தேனீர்” என்பது தேன் கலக்கப்பட்ட நீரை குறிக்கிறது.

## 30. விஜயநகர அரசவையில் ராமன்!

**பக்கங்கள் 118-119**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. ராமன் வசித்துவந்த கிராமத்தின் பெயர் என்ன?
   ராமன் வசித்துவந்த கிராமத்தின் பெயர் தெனாலி.

2. தெனாலி ராமனின் லட்சியம் என்ன?
   விஜயநகர அரசின் சபைக்குள் நுழைய வேண்டும் என்பதே தெனாலி ராமனின் இலட்சியமாகும்.

3. மங்களகிரியில் உள்ள கோயிலுக்கு வந்தவர் யார்?
   மங்களகிரியில் உள்ள கோயிலுக்கு வந்தவர் விஜயநகர அரசின் ராஜகுரு.

4. ராஜகுருவிற்கு தெனாலி ராமன் விதித்த நிபந்தனையை எழுதுக.
   தன்னைத் தோளில் சுமந்தபடி அரண்மனைக்குள் செல்ல வேண்டும் என்பதே ராஜகுருவிற்கு தெனாலி ராமன் விதித்த நிபந்தனை ஆகும்.

5. விஜயநகர அரசர் தெனாலி ராமனிற்கு அளித்த பொறுப்பு என்ன?
   விஜயநகர அரசர் தெனாலி ராமனிற்கு அரண்மனையின் விதூஷகன் என்ற பொறுப்பைக் கொடுத்தார்.

## 31. கூட்டுறவில் சேருங்கள்

**பக்கம் 122**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. பிரிந்து 2. பணக்காரார் 3. நிறைகள் 4. மகிழ்ச்சி

**ஆ) சிறுவினாக்கள்:**

1. ஏழைகள் நன்மை பெற்று வாழ வழி எது?
   கூட்டுறவில் சேர்ந்து கூடிப் பழகி வாழ்வதே நாட்டிலுள்ள ஏழைகள் நன்மை பெற்று வாழும் வழி ஆகும்.

2. சிறந்த வலிமை எது?
   சேர்ந்து வாழ்கின்ற நிலையே சிறந்த வலிமையாகும்.

3. கவலையை நீக்குவது எது?
   கைத்தொழிலே கவலைகளை நீக்குவதாகும்.

4. நாமக்கல் கவிஞர் எப்போது பிறந்தார்?

நாமக்கல் கவிஞர் 1888 ஆம் ஆண்டு அக்டோபர் 19 ஆம் நாள் பிறந்தார்.

5. நாமக்கல் கவிஞரின் சிறப்புப் பெயர் என்ன?

காந்தியக் கவிஞர் என்பது நாமக்கல் கவிஞரின் சிறப்புப் பெயர் ஆகும்.

**இ) பெருவினாக்கள்:**

1. நாமக்கல் கவிஞர் – குறிப்பு வரைக.

இராமலிங்கனார் நாமக்கல் மாவட்டத்திலுள்ள மோகனூரில் 1888 ஆம் ஆண்டு அக்டோபர் 19 ஆம் நாள் பிறந்தார். இவரது பெற்றோர் வெங்கடராமன் – அம்மணியம்மாள் ஆவர். நாமக்கல் கவிஞரின் இயற்பெயர் இராமலிங்கம் பிள்ளை. இவர் மிக எளிய சொற்களால் காந்திய கொள்கைகளை தனது எளிய கவிதைகள் மூலம் மக்களிடையே பரப்பினார். எனவே, இவர் "காந்தியக் கவிஞர்" என்ற சிறப்புப் பெயர் பெற்றார். நடுவண் அரசு 1971 ஆம் ஆண்டு இவருக்கு பத்ம பூஷன் விருதளித்து சிறப்பித்துள்ளது. இவரே தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர் ஆவார்.

2. "கூட்டுறவில் சேருங்கள்" என்ற பாடலின் கருத்துகளை எழுதுக.

கூட்டுறவில் சேர்ந்து, கூடி வாழப் பழகினால் நாட்டில் உள்ள ஏழைகள் அனைவரும் நன்மை பெற்று வாழ முடியும். அனைவரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக வாழ்வதே சிறந்த வலிமை ஆகும். இதனால் சோர்ந்து போன மக்களும் சுகங்கள் பல பெற்று வாழ முடியும். குடிசைகளில் வாழும் ஏழை எளிய மக்கள் அனைவரும் தங்களின் கவலைகளை தீர்க்க கைத்தொழில் ஒன்றை கற்றுக் கொள்ள வேண்டும். கைத்தொழில் ஒன்றே அனைவரின் கவலைகளையும் போக்க வல்லது. கூட்டுறவினால் பட்டிக்காடும் சிறப்படையும், பண்ட மாற்றமும் வளரும். கைத்தறிக்கான நூல்வளம் பெருகும், வயல்வெளிகள் மேன்மை பெறும், விளைவித்த விளைபொருட்கள் அனைத்தும் நல்ல விலைக்கு விற்கும். அசதியற்ற தொழில் செய்வதே மனிதர்களை பாதுகாக்கும் வழி ஆகும் என இராமலிங்கனார் கூறுகிறார்.

## 32. திருக்குறள்

**பக்கம் 125**

**அ) பிரித்து எழுதுக.**

1. அறிவு + அறிந்து  2. அவர் + உள்ளும்  3. சொல் + இழுக்கு
4. கற்று + அடங்கல்  5. ஐந்து + அடக்கல்  6. ஏமாப்பு + உடைத்து

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. அடங்காமை  2. வெளிச்சம்  3. சிறிது  4. தீது

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. "அடக்கம் அமரருள் உய்க்கும்" எனத் தொடங்கும் குறளின் விளக்கத்தை எழுதுக.
   அடக்கம் ஒருவனைப் பிற்காலத்தில் தேவர் உலகிற்குக் கொண்டு சேர்க்கும். அடங்காமல் வாழ்வது அவனை இருள் நிறைந்த உலகிற்குக் கொண்டு போகும்.

2. "மலையினும் மாணப் பெரிது" எது?
   தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடக்கத்துடன் வாழ்பவனைப் பற்றிய பிறர் மனத் தோற்றம் மலையைக் காட்டிலும் மிகப் பெரியதாகும்.

3. ஐம்பொறிகளை அடக்கி வாழ்தலின் பயன் யாது?
   ஒருவன் தனது மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளையும் அறத்திற்கு மாறான தீமை வரும்போது அடக்கி வாழ்ந்தால், அது அவனுக்கு ஏழு பிறப்பிலும் அரணாக இருந்து உதவும்.

4. நாவைக் காப்பதன் முக்கியத்துவம் யாது?
   நாம் எவற்றை காக்கா விட்டாலும் நாவை அடக்கி காக்க வேண்டும். இல்லையெனில் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துன்புற நேரிடும்.

5. "தீயினாற் சுட்டபுண்" – குறள் விளக்கம் தருக.
   ஒருவனை மற்றொருவன் தீயினால் சுட்ட புண் புறத்தே வடுவாக இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால், நாவினால் தீய சொல் கூறிச் சுடும் வடு என்றும் ஆறாது.

## 33. உணவுத் திருவிழா!

**பக்கம் 129**

**அ) பிரித்து எழுதுக.**

1. விழிப்பு + உணர்வு  2. நினைவு + ஆற்றல்  3. குடல் + புண்
4. சிவப்பு + அணுக்கள்  5. எள் + உருண்டை

**ஆ) சிறுவினாக்கள்:**

1. தினை, வரகு, சாமை, குதிரை வாலி போன்றவற்றில் காணப்படும் சத்துகள் யாவை?
   தினை, வரகு, சாமை, குதிரை வாலி ஆகிய அரிசி வகைகளில் நார்ச்சத்தும், உயிர்ச்சத்தும், தாது உப்புகளும் அதிகம் உள்ளன.

2. கம்பில் நிறைந்துள்ள சத்துகளை எழுதுக.
கம்பில் நார்ச்சத்தும், மாவுச்சத்தும் நிறைந்துள்ளது.

3. சோளத்தின் பயன்களை எழுதுக.
சோளத்தில் உயிர்ச்சத்து "ஏ" மற்றும் புரதச்சத்து போன்றவை அதிகம் உள்ளது. இது உடல் வளர்ச்சிக்கான ஆற்றலைத் தருகிறது.

4. ஆவி மூலம் வேக வைக்கப்படும் உணவுப் பொருட்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
சிவப்பரிசிப் பிட்டு, கொழுக்கட்டை, இடியாப்பம், வெண்பிட்டு, சீனிக்கிழங்கு, பனங்கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு ஆகியன ஆவி மூலம் வேக வைக்கப்படும் உணவுப் பொருட்கள் ஆகும்.

5. கீரையின் பயன்களை எழுதுக.
கீரைகளில் இரும்புச்சத்தும், தாது உப்புகளும் மிகுதியாக உள்ளது. கீரைகள் தெளிவான கண்பார்வைக்கு உதவுகின்றன. மேலும், இரத்தத்தில் சிவப்பணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் கீரைகள் உதவுகின்றன.

6. உணவுத் திருவிழாவில் என்னென்ன பானங்கள் இடம்பெற்றன?
சுக்கு நீர், பதனீர், வல்லாரைச்சாறு, கேழ்வரகுக் கஞ்சி, பனங்கற்கண்டு சாறு, கீழாநெல்லி சாறு, அருகம்புல் சாறு, இளநீர் போன்ற பானங்கள் உணவுத் திருவிழாவில் இடம்பெற்றிருந்தன.

**இ) பெருவினாக்கள்:**

1. பயிர்களின் வகைகள் மற்றும் அவற்றின் பயன்கள் பற்றி எழுதுக.
பாசிப்பயறு, சுண்டல், நவதானிய சுண்டல், கொண்டைக் கடலை, தட்டைப் பயறு, மொச்சை என்பன பயறு வகைகள் ஆகும். இவற்றில் புரதச்சத்து மிகுதியாக உள்ளது. இந்த பயறு வகைகள் உடல் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றன.

2. எள்ளின் பயன்களை எழுதுக.
உடம்பு இளைத்தவர்களுக்கு ஏற்ற உணவு "எள்" ஆகும். எள் உணவு கொழுப்புச்சத்துத் தரவல்லது. இது குடற்புண்களை ஆற்றும் தன்மை கொண்டது. எள்ளுருண்டை, எள்ளுப் பணியாரம், எள்ளுமாவு, எள்ளுப் பொடி என்பன எள்ளை பயன்படுத்தி தயாரிக்கப்படும் பலவகை உணவுப் பொருட்கள் ஆகும்.

## 34. இணைச் சொற்கள்

**பக்கங்கள் 133-134**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆ) இணைச் சொற்கள் 2. அ) மூன்று 3. இ) நேரிணைச்
4. ஆ) எதிரிணைச் 5. அ) செறியிணைச்

**ஆ) இணைச் சொற்களைப் பொருத்தி அவற்றின் வகைகளை எழுதுக.**

1. வாடிவதங்கி – நேரிணைச் சொல்
2. தப்பித் தவறி – செறியினைச் சொல்
3. இருளும் ஒளியும் – எதிரிணைச் சொல்
4. நிலம் புலம் – நேரினைச் சொல்
5. பார்த்துப் பார்த்து – செயல்செறியிணைச் சொல்

**இ) கொடுக்கப்பட்டுள்ள இணைச் சொற்களை வகைப்படுத்தி எழுதுக.**

| நேரிணை | எதிரிணை | செறியிணை |
|---|---|---|
| ஆற அமர | வடக்கும் தெற்கும் | கன்னங்கரேல் |
| உற்றார் உறவினர் | குறுக்கும் நெடுக்கும் | வாயும் வயிறும் |
| வந்து வந்து | அடியும் நுனியும் | மூக்கும் முழியும் |
| ஓங்கி உயர்ந்த | உள்ளும் புறமும் | ஓடியோடி |
| நியாய தர்மம் | உயர்வு தாழ்வு | தங்கு தடை |
| தேடித் தேடி | காலை மாலை | ஏழை எளிய |
| முட்டி மோதி | லாபம் நட்டம் | |
| குற்றங் குறை | வெற்றி தோல்வி | |
| அருமை பெருமை | | |

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. இணைச் சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

   ஒரு வாக்கியத்தில் இருவேறு சொற்கள் இணைந்து வருவது இணைச் சொல் எனப்படும். அச்சொற்களைத் தனித்து பார்த்தால் இருவேறு பொருளைத் தரும்.

   எ.கா. ஓங்கி உயர்ந்த மலை

   மேற்கண்ட எடுத்துக்காட்டில் "ஓங்கி உயர்ந்த" என்பது இணைச் சொல் ஆகும்.

2. இணைச் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

   இணைச் சொற்கள் மூன்று வகைப்படும். அவை,

   - நேரிணைச் சொற்கள்
   - எதிரிணைச் சொற்கள்
   - செறியிணைச் சொற்கள்

3. நேரிணைச் சொல்லைச் சான்றுடன் விளக்குக.

ஒரே பொருள் தரக்கூடிய இரண்டு சொற்கள் இணைந்து வருவது நேரிணைச் சொற்கள் எனப்படும். இவை ஒரே பொருளைத் தந்து கருத்துகளை வலுப்படுத்த உதவுகின்றன.

எ.கா. வளவன் பேரும் புகழும் பெற்று வாழ்ந்தான்.

மேற்கண்ட எடுத்துக்காட்டில், "பேரும் புகழும்" ஆகிய இரு சொற்களும் ஒரே பொருளைத் தருகின்றன. எனவே, இவை நேரிணைச் சொற்களாகும்.

4. எதிரிணைச் சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு சொற்கள் இணைந்து வருவது எதிரிணைச் சொற்கள் எனப்படும்.

எ.கா. சாலை மேடு பள்ளமாக இருந்தது.

மேற்கண்ட எடுத்துக்காட்டில், "மேடு பள்ளம்" ஆகிய இரண்டு எதிர்ச்சொற்களும் இணைந்து வந்துள்ளது.

5. செறியிணைச் சொல் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

ஒரு சொல்லின் பண்பையோ அல்லது செயலையோ மிகைப்படுத்திக் கூறுவதற்காக ஒரே பொருளைத் தரும் இரண்டு சொற்கள் இணைந்து வருவது செறியிணைச் சொற்கள் எனப்படும். இது பண்பு செறியிணைச் சொற்கள், சொல் செறியிணைச் சொற்கள் என இரண்டு வகைப்படும்.

6. பண்பு செறியிணைச் சொல்லைச் சான்றுடன் விவரி.

ஒரு பொருளின் பண்பை மிகைப்படுத்திக் கூறப் பயன்படுவது பண்பு செறியிணைச் சொற்கள் ஆகும்.

எ.கா. வயல்வெளிகள் பச்சைப்பசேல் எனச் செழிப்பாக இருந்தன.

மேற்கண்ட எடுத்துக்காட்டில், "பச்சைப்பசேல்" என்னும் சொல் பயிர்களின் பண்பை மிகைப்படுத்திக் கூறுகிறது.

7. செயல் செறியிணைச் சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

ஒரு செயலை மிகைப்படுத்திக் கூறப் பயன்படுவது செயல் செறியிணைச் சொற்கள் ஆகும்.

எ.கா. கண்ணன் வெகு தொலைவு நடந்து நடந்து சோர்ந்து போனான்.

மேற்கண்ட எடுத்துக்காட்டில், "நடந்து" என்ற ஒரே சொல்லே மீண்டும் வந்து அந்தச் செயலை மிகைப்படுத்திக் காட்டுகிறது.

## 35. நல்ல தீர்ப்பு!

**பக்கம் 138**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. சோழ நாட்டு அரசனின் பெயர் என்ன?
   சோழ நாட்டு அரசனின் பெயர் கரிகாலன்.

2. மாணிக்கத்தின் நிலத்தை வாங்கியவர் யார்?
   மாணிக்கத்தின் நிலத்தை வாங்கியவர் முத்து.

3. முத்து நிலத்தைத் தோண்டும்போது என்ன கிடைத்தது?
   முத்து நிலத்தைத் தோண்டும்போது புதையல் கிடைத்தது.

4. கரிகாலனைப் பார்த்து மாணிக்கமும், முத்துவும் ஏன் திகைத்தனர்?
   புதையல் யாருக்கு சொந்தமானது என்ற பிரச்சனைக்கு சரியான தீர்வு காண மாணிக்கமும், முத்துவும் அரசர் கரிகாலனை தேடிச் சென்றனர். தங்களை விட வயதில் மிகவும் இளையவராக இருந்த கரிகாலனைப் பார்த்த இருவரும் திகைத்துப் போனார்கள்.

5. "நல்ல தீர்ப்பு" கதையில் கரிகாலன் வழங்கிய தீர்ப்பு யாது?
   முத்து மற்றும் மாணிக்கம் போன்ற நல்லவர்கள் தமது நாட்டில் வாழ்வதைக் கண்டு அரசர் கரிகாலன் மனமகிழ்ச்சி அடைந்தார். முத்துவிற்கு ஒரு மகனும், மாணிக்கத்திற்கு ஒரு மகளும் இருப்பதை விசாரித்து அறிந்தார். பின்னர் அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்துவைக்கும்படியும், அந்தப் புதையலை மணமக்களுக்குத் திருமணப் பரிசாக வழங்கும்படியும் தீர்ப்பு வழங்கினார்.

## 36. நான்மணிக்கடிகை

**பக்கம் 140**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. இவ்வுலகில் நிலைத்து வாழ என்ன செய்ய வேண்டும்?
   இவ்வுலகில் நிலைத்து வாழ புகழ் உண்டாகும் செயல்களைச் செய்ய வேண்டும்.

2. பிறரை வெற்றிக் கொள்ள என்ன செய்ய வேண்டும்?
   பிறரை வெற்றிக் கொள்ள வேண்டுமென்றால் கோபத்தை விட்டு விட வேண்டும்.

3. தன்னுடன் துணையாக வருவது எது?
   ஒருவர் இறந்த பிறகும் அவருடன் துணையாக வருவது அவர் செய்யும் தான தர்மங்கள் மட்டுமே ஆகும்.

4. இரத்தலால் வருவது எது?
இரத்தலால் ஒருவருக்கு வருவது இழிவு ஒன்றே ஆகும்.

## 37. பூனை பூனைதான்!

**பக்கம் 143**

**அ) சிறுவினாக்கள்:**

1. பூனை நன்கு கொழுத்து வளரக் காரணம் என்ன?
பூனை நன்கு கொழுத்து வளரக் காரணம் பாட்டி ஊட்டிய பாலும் பழமும் ஆகும்.

2. பூனை கண்ணாடியில் எதைக் கண்டது?
பூனை கண்ணாடியில் அதன் உருவத்தை கண்டது.

3. பூனை எவற்றை உடைத்து நொறுக்கியது?
பூனை வீட்டிலிருந்த சட்டி மற்றும் பானைகளை உடைத்து நொறுக்கியது.

4. கோபம் கொண்ட பாட்டி என்ன செய்தார்?
கோபம் கொண்ட பாட்டி கீழே கிடந்த துடைப்பத்தை எடுத்து பூனையின் மீது போட்டாள்.

**ஆ) பெருவினாக்கள்:**

1. அழ. வள்ளியப்பா – குறிப்பு வரைக.
அழ. வள்ளியப்பா புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இராயவரத்தில் 1922 ஆம் ஆண்டு நவம்பர் 7 ஆம் நாள் பிறந்தார். இவரது பெற்றோர் அழகப்ப செட்டியார் – உமையாள் ஆச்சி ஆவர். இவரின் இயற்பெயர் வள்ளியப்பன். சில காரணங்களால் வள்ளியப்பா அவர்களால் தனது படிப்பைத் தொடர முடியவில்லை. எனவே, 1940 ஆம் ஆண்டு சென்னையில் உள்ள வை. கோவிந்தனின் “சக்தி பத்திரிக்கை” அலுவகத்தில் காசாளராகப் பணியில் சேர்ந்தார். 1950 ஆம் ஆண்டு குழந்தை எழுத்தாளர்கள் பலரைத் திரட்டி, குழந்தை எழுத்தாளர்கள் சங்கத்தை நிறுவினார். “சிரிக்கும் பூக்கள்” என்ற கவிதை தொகுப்பை வெளியிட்ட பின்னர், “குழந்தைக் கவிஞர்” என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். 1982 ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வள்ளியப்பாவிற்கு “தமிழ்பேரவைச் செம்மல்” என்ற விருதை அளித்துப் பாராட்டியது. குழந்தைக் கவிஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு மார்ச் 16 இவ்வுலகைவிட்டு மறைந்தார்.

2. “பூனை பூனைதான்” என்னும் பாடலின் பொருளை சிறு கதையாக எழுதுக.
ஒரு பாட்டி தனது வீட்டில் பல நாட்களாக பூனை ஒன்றை வளர்த்து

வந்தாள். பாட்டி ஊட்டிய பாலும் பழத்தையும் நன்கு உண்டு கொழுகொழுவென வளர்ந்திருந்தது அந்தப் பூனை. ஒரு நாள் ஓர் அறையில் கண்ணாடி ஒன்று இருப்பதைக் கண்டது. உடனே, விரைந்து சென்ற அந்தப் பூனை கண்ணாடியில் தனது உருவத்தைக் கண்டது. தனது கனத்த உடலையும், அதில் இருக்கும் நீளமான கறுத்த கோடுகளையும் பார்த்தவுடன் தன்னை ஒரு சிறுத்தை எனவும், இனிமேல் யாருக்கும் பயப்பட தேவையில்லை எனவும் எண்ணியது.

அதன் பின்னர் பூனை தன்னை ஒரு புலியென நினைத்து, வீட்டிலிருந்த சட்டி மற்றும் பானைகளின் மீது பாய்ந்து உடைத்து நொறுக்கியது. வீட்டினுள்ளே ஆட்டம் போட்டு வீட்டையே அதிரச் செய்தது அந்தப் பூனை. அப்போது சத்தம் கேட்டு பாட்டி அங்கே வந்தாள். பாட்டி வருவதைக் கண்ட பூனை அவள் மீதும் பாய்ந்தது. இதனால் கோபம் அடைந்த பாட்டி, அங்கே கீழே கிடந்த துடைப்பத்தை எடுத்து அந்தப் பூனையின் தலைமீது பொத்து... பொத்து... என உதைகள் போட்டாள். பாட்டி அடியைத் தாங்க முடியாமல் பூனை அங்கேயே படுத்து விட்டது. தன்னை கொடிய புலியாக எண்ணியது தன்னுடைய குற்றம்தான் என வருந்தியது அந்தப் பூனை. பூனை என்றும் பூனைதான்; அதனால் புலியாக மாறமுடியாது என்ற உண்மையை நன்கு உணர்ந்து கொண்ட பூனை மீண்டும் சாதுவாக மாறியது.

## 38. செயற்கைக்கோளின் விந்தைகள்

**பக்கம் 151**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆ) ஸ்புட்னிக் 1    2. ஆ) ஆரியபட்டா    3. இ) பெங்களூர்
4. ஆ) 1969    5. அ) ஜிசாட்–3

**ஆ) பொருத்துக.**

1. ஏவுகலன்    2. இந்திய வானியலாளர்
3. கைலாசவடிவு சிவன்    4. இருப்பிடம்    5. கல்வி

**இ) சிறுவினாக்கள்:**

1. செயற்கைக்கோள் என்றால் என்ன?

விண்வெளியில் இயற்கையாக அமைந்துள்ள கோள்களை போலவே மனிதனால் செயற்கையாக உருவாக்கப்பட்டவையே செயற்கைக்கோள் ஆகும்.

2. உலகின் முதல் செயற்கைக்கோள் எது? அது எந்த ஆண்டு ஏவப்பட்டது?

உலகின் முதல் செயற்கைக்கோள் "ஸ்புட்னிக் 1" என்பதாகும். இது 1957 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தால் விண்ணில் ஏவப்பட்டது.

3. இந்தியாவின் முதல் செயற்கைக்கோளின் பெயர் என்ன? அதன் பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.
இந்தியாவின் முதல் செயற்கைக்கோளின் பெயர் ஆரியபட்டா. புகழ்பெற்ற இந்திய வானியலாளரான ஆரியபட்டாவை சிறப்பிக்கவே அந்த செயற்கைக்கோளுக்கு அவரின் பெயர் சூட்டப்பட்டது.

4. இந்திய விண்வெளி ஆய்வின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
இந்திய விண்வெளி ஆய்வின் தந்தை என்று அழைக்கப்படுபவர் விக்ரம் சாராபாய்.

**ஈ) பெருவினாக்கள்:**

1. இந்திய விண்வெளி ஆய்வு மையம் – குறிப்பு வரைக.
நமது நாட்டில் விண்ணில் செயற்கைக்கோள்களை செலுத்துவது, அவ்வாறு செலுத்தப்பட்ட செயற்கைக்கோள்களை கண்காணிப்பது, இயக்குவது, அதனுடன் தொடர்பு கொள்வது போன்ற பணிகளை மேற்கொள்வதே இந்திய விண்வெளி ஆய்வு மையம் ஆகும். இதன் தலைமையகம் பெங்களூரில் அமைந்துள்ளது. இஸ்ரோ என்று சுருக்கமாக அழைக்கப்படும் இந்த ஆய்வு மையமானது 1969 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. “இந்திய விண்வெளி ஆய்வின் தந்தை” என்றழைக்கப்படும் விக்ரம் சாராபாய் அவர்களின் முழு முயற்சியினாலேயே இந்த மையம் அமைக்கப்பட்டது.

2. விவசாயத்திற்கு செயற்கைக்கோள்கள் எவ்வாறு பயன்படுகின்றன?
செயற்கைக்கோள்கள் பூமியை ஒவ்வொரு நொடியும் இடைவிடாது கண்காணிக்கின்றன. இதனால் விவசாய ஆய்வுப் பணிகள், நிலத்தடி நீர்மட்டத்தை அறிதல், பாசன வசதிகளை தெரிந்து கொள்ளுதல், மண்ணின் தன்மை, மழை அளவு, பருவநிலை மாற்றம், வறட்சி பற்றி முன்கூட்டிய அறிவிப்புகள் என பலவிதமான சேவைகளை இவை வழங்குகின்றன.

3. கல்விக்கென்று ஏவப்பட்ட செயற்கைக்கோள் எது? அதன் பயன்பாடுகளை எழுதுக.
கல்விக்கென்று தனியாக ஜிசாட்–3 என்னும் செயற்கைக்கோளை இஸ்ரோ 2004 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் நாள் விண்ணில் ஏவியது. இதற்கு எடுசாட் என்ற பெயரும் உள்ளது. இது நாட்டிலுள்ள அனைத்து பகுதிகளுக்கும் கல்வியை பரப்ப உதவுகின்றன. கல்வி பற்றிய வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இதன் மூலம் மாணவர்களை சென்றடைகின்றன. தொலைதூரக் கல்விக்கும், வீட்டிலிருந்தபடியே பல்வேறு புத்தகங்களை நாம் தரவிறக்கம் செய்து படிக்கவும் இது பயன்படுகிறது.

## 39. மரபுச் சொற்கள்

**பக்கம் 153**

**அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள பறவை மற்றும் விலங்குகளை அவை எழுப்பும் ஓசைகளுடன் பொருத்தி, இணைத்து எழுதுக.**

1. குதிரை கனைக்கும்
2. கிளி பேசும்
3. காகம் கரையும்
4. நரி ஊளையிடும்
5. சேவல் கூவும்
6. புலி உறுமும்
7. கோழி கொக்கரிக்கும்

**ஆ) விலங்குகளின் இளமைப் பெயர்களை எழுதுக.**

1. யானைக்கன்று
2. நாய்க்குட்டி
3. பன்றிக்குட்டி
4. ஆட்டுக்குட்டி
5. அணிற்பிள்ளை
6. மான் கன்று
7. புலிப்பறள்
8. சிங்கக்குருளை
9. குதிரைக்குட்டி
10. பூனைக்குட்டி

## 40. ஆமையும், நத்தையும்!

**பக்கம் 157**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. ஆமை, நத்தையின் மனக்குறை என்ன?
   தங்களால் வேகமாக நடக்கவோ, தாவிக் குதித்து ஓடவோ முடியவில்லை என்பதே ஆமை, நத்தையின் மனக்குறை ஆகும்.

2. முயலிடம் ஆமை கேட்ட கேள்வி என்ன?
   "உன்னால் மட்டும் எப்படி வேகமாக தாவிக் குதித்து ஓட முடிகிறது?" என்பதே முயலிடம் ஆமை கேட்ட கேள்வி ஆகும்.

3. முயல் தான் வேகமாக ஓடுவதற்கு காரணம் என்னவென்று ஆமை மற்றும் நத்தையிடம் கூறியது?
   முயல் தான் வேகமாக ஓடுவதற்கு தனது முதுகில் கனமான ஒடு இல்லாமல் இருப்பதே காரணம் என ஆமை மற்றும் நத்தையிடம் கூறியது.

4. புதரின் மறைவில் இருந்தது யார்?
   புதரின் மறைவில் இருந்தது ஓநாய்.

5. ஆமையும், நத்தையும் யாருக்கு நன்றி கூறின?

எதிரியிடமிருந்து தங்களைக் காப்பாற்றிய தங்களின் ஓடுகளுக்கு ஆமையும், நத்தையும் நன்றி கூறின.

# குறிப்புகள்

# குறிப்புகள்